சிலம்பு	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௩, புரட்டாசி	பரல்
௩௭	அக்டோபர், 1962	௨

திருமுறையும் நவராத்திரிக் குறிப்பும்

தொன்றுதொட்டுத் தென்றமிழ் நாட்டிற் பயின்றுவரும் ஆண்டுத் தொடக்கம் ஆவணி முதலாகும். அஃது உலகியல் வழக்கில் எல்லா இடங்களிலும் ஆடியறுதி எனப் பயின்று வருவதால் விளங்கும். மேலும் ஆவணித் திங்கள் வளர்பிறை நான்கில் பிள்ளையார்சதுர்த்தி விழாக் கொண்டாடப்படுகின்றது. இஃது அறிவின் குறிப்பாகும். புரட்டாசித் திங்கள் வளர்பிறை ஒன்பதில் கலைமகள் விழாக் கொண்டாடப்படுகிறது. இஃது ஆற்றலின் குறிப்பாகும். ஐப்பசி வளர்பிறை ஆறில் கந்தர்சட்டி விழாக் கொண்டாடப்படுகின்றது. இஃது அறிவு ஆற்றல்களின் நிலைக்களமாகிய அன்பின் குறிப்பாகும். இம்முறையினாலும் ஆண்டுத் தொடக்கம் ஆவணி என்பதே தேற்றமாம். மேலும் தொல்காப்பியப் பொருளதிகாரவுரையில் நச்சினார்க்கினியர் உரைப்பதும் மேலதனையே வலியுறுத்துகின்றது. அது வருமாறு :

> "இக்காலங்கட்கு விதந்து ஓர் பெயர் கூறுது வாளா கூறினர், அப்பெயர் உலகவழக்காய் அப் பொருள் உணர நிற்றலின். காலவுரிமை எய்திய ஞாயிற்றுக்குரிய சிங்கவோரை முதலாகத் தண்மதிக்குரிய கற்கடக வோரை யீறுக வந்து முடியுந்துணை ஓர் யாண்டாமாதலின் அதனை இம்முறையானே அறுவகைப் படுத்து இரண்டு திங்கள் ஒரு காலமாக்கினர்."
>
> —தொல். பொருள் - ௬ காரு மாலையு.

ஒன்பானிரவாகிய நவராத்திரி விழாக் குறிப்புத் திருத்தொண்டர் புராணத்தில் காணப்படுவது வருமாறு :

" மற்றவ ரணைய விப்பால் வளநக ரதனின் மன்னுங்
கொற்றவர் வளவர் தங்கள் குலப்புகழ்ச் சோழ னார்தம்
பற்றலர் முனைகள் சாய்க்கும் பட்டவர்த் தனமாம் பண்பு
பெற்றவெங் களிறு கோலம் பெருகுமா நவமி முன்னாள்."
௧௨. எறிபத்தர் - ௧௧.

இனி இவ்விழாவினைக் கொண்டாடுவதற்கு அடிப்படையாக வைத்துக் கொள்வதற்குப் பெரும்பாலும் ஒருபுடையொப்பாகத் திகழ்வது திருஞானசம்பந்தப் பெருமானார் திருவாய் மலர்ந்தருளிய சிவபுரத்திருப்பதிகம் ஆகும். அத்திருப்பதிகத்தின்கண் முதல் ஐந்து திருப்பாட்டுக்கள் படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் என்னும் அருட்டிருத் தொழில்கள் ஐந்தினையும் குறிப்பனவாகும். பின்னுள்ள ஐந்து திருப்பாட்டுகளும் முறையே இவற்றின் பயன் குறிப்பனவாகும். திருக்கடைக்காப்பு இப் பயன்களைத் தொகுத்து ஓதுகின்றது. இவற்றை ஒரு சிறிது விளக்குதும்.

௧. புவம்வளி கனல்புனல் புவிகலை யுரைமறை திரிகுண மமர்நெறி
திவமலி தருசுரர் முதலியர் திகழ்தரு முயிரவை யவைதம
பவமலி தொழிலது நினைவொடு பதுமநன் மலரது மருவிய
சிவனது சிவபுர நினைபவர் செழுநில னினினிலை பெறுவரே.

இத்திருப்பாட்டு உலகங்களும் உடல்களும் திருவருளாணைத திருக்குறிப்பால் தோன்றின. அதுபோல் புகழ்பெற்ற கலைகளும் மறைகளுந் தோன்றின. இவ்வுடலங்களிலும் உலகங்களிலும் தேவர் முதல் புழு ஈறுகவுள்ள உயிரினங்கள் பொருந்தின. விழுமிய முழுமுதற் சிவனை வழுத்துவோர் உலகியற்கலை நிரம்பப் பெறுவர். நல்ல முறையாகத் தென்றமிழ் நாட்டில் வாழ்வர். எனவே இஃது அயனார் திருவாற்றலாகிய கலைமகளைக் குறிப்பதாகும். ஆயின் இது படைப்பு. இத்தொழிலினை மேற்கொண்ட காலத்து முழுமுதற் சிவபெருமான் படைப்போன் அல்லது அயன் என வழங்கப்படுகின்றனன். இவ்விழாவினை முதல் இரண்டு நாட்களும் கொண்டாடுதல் ஏற்புடைத்தாகும். இது கலைமகட்குரியதாகும்.

௨. மலைபல வளர்தரு புவியிடை மறைதரு வழிமலி மனிதர்கள்
நிலைமலி சுரர்முத லுலகுக ணிலைபெறு வகைநினை வொடுமிகும்
அலைகட னடுவறி துயிலம ரரியுரு வியல்பர னுறைபதி
சிலைமலி மதிள்சிவ புரநினை பவர்திரு மகளொடு திகழ்வரே.

இத்திருப்பாட்டுக் காத்தலைக் குறிக்கின்றது. இதன்கண் அரி, திருமகள் முதலிய திருப்பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திருப்பாட்டு மூன்றும் நான்காம் நாள் வழிபாட்டிற் குரியதாகும். இது திருமகட்குரியதாகும்.

ரு. பழுதில கடல்புடை தழுவிய படிமுத லியவுல குகண்மலி
குழுவிய சுரர்பிறர் மனிதர்கள் குலமலி தருமுயி ரவையவை
முழுவது மழிவகை நினைவொடு முதலுரு வியல்பர னுறைபதி
செழுமணி யணிசிவ புரநகர் தொழுமவர் புகழ் மிகுமுலகிலே.

இத்திருப்பாட்டுத் துடைத்தலைக் குறிக்கின்றது. சிவபெருமான் திருவருட்டிருவாணையால் தோன்றியவுலகங்கள் அழியும் வகை திருவுள்ளங் கொண்டருளுகின்றனன். அப்பொழுது அவை அழிவெய்துகின்றன. அழிவென்பது ஒடுக்கம். ஒடுக்கம் இளைப்பாறுதற் பொருட்டு. இளைப்பாறுதல் எவர்க்கும் இன்பம் பயப்பதேயாகும். இவ்வுண்மை வருமாறு :

அழிப்பிளைப் பாற்ற லாக்க மவ்வவர் கன்ம மெல்லாங்
கழித்திட னுகரச் செய்தல் காப்பது கன்ம வொப்பிற்
றெழித்திடன் மலங்க ளெல்லா மறைப்பருள் செய்திதானும்
பழிப்பொழி பந்தம் வீடு பார்த்திடி னருளே யெல்லாம்.

—சித்தியார். க. உ - கூ.

துன்பந்துடைத்து இன்பம் அடைப்பதுதான் யாண்டும் எவர்க்கும் புகழாகும். எனவே இத்திருப்பாட்டு துடைத்தலுக் குரியதாகும். இது புகழ்மகள் விழாவிற்குரியதாகும். இஃது ஐந்தாம் நாள் ஆறும் நாள் விழாவிற்கேற்புடைத்து. உலகியற் கலையினை நலமுறக் கற்று அறமுறை பிழையாது அரும்பொருளீட்டி உழைத்துண்ணும் உளமுடையார்க்கு வளமுற உதவி வாழ்வதே புகழுக்குரிய பொற்புடைச் செயலாகும். இதனைக் கொடுத்துக் காத்தலென்ப.

சு. நறைமலி தருமள ருறுமுகை நகுமலர் புகைமிகு வளரொளி
நிறைபுனல் கொடுதனை நினைவொடு நியதமும் வழிபடு மடியவர்
குறைவில பதமணை தரவருள் குணமுடை யிறையுறை வனபதி
சிறைபுன லமர்சிவ புரமது நினைபவர் செயமகள் தலைவரே.

இத்திருப் பாட்டின்கண் வழிபாட்டிற்குரிய அறுவகைப் பொருள்களும் அப்பொருள்களுடன் இன்றியமையாத பிறவும் கொண்டு திருமுறைத் திருமந்திரத் திருப்பாட்டுக்கள் ஓதி வழிபடுதல் வேண்டும். அங்ஙனம் வழிபடுவார் பேராண்மை மிக்க பெருந்திருவினராவர். இதுவே அகப்பகை புறப்பகை இரண்டினையும் தடுத்துக்காக்கும் தனிப்பெருஞ் செய்கையாகும். அதனால் இது செயமகள் விழாவிற்குரியதாகும். செயமகள் எனினும் கொற்றவை எனினும் வெற்றித்திருவெனினும் ஒன்றே. இது சலமகள் எனப் போற்றப்படும் நடப்பாற்றலாகும். இஃது ஏழாம் நாள் எட்டாம் நாள் விழாவிற்குரியதாகும்.

௩. சினமலி யறுபகை மிகுபொறி சிதைதரு வகைவளி நிறுவிய
மனனுணர் வொடுமலர் மிசையெழு தருபொருணியதமு முணர்பவர்
தனதெழி லுருவது கொடுவடை தருபர னுறைவது நகர்மதிள்
கனமரு வியசிவ புரநினை பவர்கலை மகள்தர நிகழ்வரே.

இத்திருப்பாட்டு வீட்டியற் கலையைக் குறிப்பதாகும். நான்காம் திருப்பாட்டு நோன்பு எனப்படும் சிவவழிபாட்டுத் திருத்தொண்டினைக் குறிக்கின்றது. நோன்பு - கிரியை; பூசை. அதனால் இத்திருப்பாட்டு அதன் மேணிலையாகிய செறிவினைக் குறிப்பதாகும். செறிவு - யோகம். உயிர்ப்படக்கிச் செயிர்தீர் உள்ளத்து வழிபடுவது அகத்தவமாகிய யோகம் எனப்படும். இவ்வியோகினைப் புரிவோர் திருவடிக்கீழுறையும் பெருவாழ்வினைப் பெறுவிக்கும் திருவடியுணர்வினைப் பெறுவர். அதுவே மெய்யுணர்வுக்கலை. மெய்யுணர்வு எனினும் மூதறிவெனினும் ஒன்றே. இது வனப்பாற்றலாகிய மலைமகள் வழிபாட்டிற்குரியது. இஃதருள் நிலையாகும்.

இத்திருப்பாட்டு ஒன்பது பத்தா நாட்களுக்குரியதாகும். ஒன்பதாம் நாள் 'எருமைப் பெயரோன் பேருரங்கிழித்த' பெருமைப் பெருந்திருவும், பேராற்றலுமாகிய கொற்றவைக்குரியதாகும். குன்றுக் குணமார் கொற்றவை நின்ற மலைமகளாகும். ஈண்டுக் கூறிய மலைமகள் வனப்பாற்றல். வனப்பாற்றல்—பராசத்தி. நடப்பாற்றல்—திரோதான சத்தி, ஒன்பதாம் நாள் விழாத்தடுத்துக் காக்கும் தனியாற்றலின் விழாவாகும். பத்தாநாள் விழா மாறிலின்பங் கொடுத்துக் காக்கும் மலைமகள் விழாவாகும். இத்திருநாளை விசயதசமி என்ப. இந்நாளில் ஏடு தொடங்குதல் முதல் வாழ்க்கைக்கு வேண்டும் கலைப்பயிற்சியும், தொழிற்பயிற்சியும் அனைவர்களாலும் அன்புடன் தொடங்கப் பெறும். இங்ஙனம் தொடங்குவதற்கு நாள்கோள் பார்க்கும் நாட்டம் எவரும் கொள்வதில்லை. இதுவே தென்றமிழ் நாட்டுச் செந்நெறியின் சீரிய கொள்கை. அஃதாவது சிவன் திருவருளை நினைந்து எதனையும் தொடங்குவது. நாள்கோள் நாடி நடுங்குவதில்லை. இவ்வுண்மையினை இது போன்ற சில நடைமுறைக் கொள்கைகள் நமக்கு விளக்குகின்றன.

௬. சுருதிகள் பலநல முதல்கலை துகளறு வகைபயில் வொடுமிகு
உருவிய லுலகவை புகழ்தர வழியொழு குமெயுறு பொறியொழி
அருதவ முயல்பவர் தனதடி யடைவகை நினையர னுறைபதி
திருவருள் சிவபுர நினைபவர் திகழ்குல னிலனிடை நிகழுமே.

இத்திருப்பாட்டு முதல் திருப்பாட்டின்படி உலகியற் கல்வி கற்று உடையானடி மறவாது ஒழுகும் செந்நெறிச் செல்வரின் கால்வழி இந் நிலவுலகத்தில் எந்நாளும் வாழ்ந்து வரும் என்னும்

உண்மையினை உணர்த்துகின்றது. இதனால் இது முதற்றிருப் பாட்டின் பயன் ஓதுவதாகும்.

எ. கதமிகு கருவுரு வொடுவுகி ரிடவட வரைகண கணவென
மதமிகு நெடுமுக னமர்வளை மதிதிக ழெயிறத னுதிமிசை
இதமமர் புவியது நிறுவிய வெழிலரி வழிபட வருள்செய்த
பதமுடை யவனமர் சிவபுர நினைபவர் நிலவுவர் படியிலே.

இரண்டாந் திருப்பாட்டின்படி அறமுறையால் பொருளீட்டித் திறமுற வாழ்பவர் இவ்வுலகில் நன்கு வாழ்வரென்னும் பயனை இத் திருப்பாட்டுக் கூறுகின்றது.

அ. அசைவுறு தவமுயல் வினிலய னருளினில் பெருவலி கொடுசிவன்
இசைகயி லையையெழு தருவகை யிருபது கரமவை நிறுவிய
நிசிசரன் முடியுடை தரவொரு விரல்பணி கொளுமவ னுறைபதி
திசைமலி சிவபுர நினைபவர் செழுநிலனி னிகழ் வுடையரே.

பொய்யில் முறையால் பொருளீட்டிச் செய்யும் புண்ணியத்தால் பொன்றுப் புகழ் பெற்று வாழும் வகையோதும் மூன்றும் திருப்பாட்டின் பயன் சிவவுலகத்து வாழ்தல். அப்பயன் இத் திருப்பாட்டின்கண் ஓதப்படுகின்றது.

கூ. அடன்மலி படையரி யயனொடு மறிவரி யதொரழுன் மலிதரு
சுடருரு வொடுநிகழ் தரவவர் வெருவொடு துதியது செயவெதிர்
விடமலி களநுத லமர்கண துடையுரு வெளிபடு மவனகர்
திடமலி பொழிலெழில் சிவபுர நினைபவர் வழிபுவி திகழுமே.

நான்காம் திருப்பாட்டில் கொடுத்துத் துன்பம் போக்கும் குணம் கூறப்பட்டது. இத்திருப்பாட்டில் அதன் பயனாக அப் பெரும்புகழ்ப் பெரியோர்வழி இப்புவியின்கண் என்றும் நின்று நிலவும் என்னும் மெய்ம்மை ஓதப்படுகின்றது.

கம. குணமறி வுகணிலை யிலபொரு ளுரைமரு வியபொருள்களுமில
திணமெனு மவரொடு செதுமதி மிகுசம ணருமலி தமதுகை
உணலுடை யவருணர் வருபரனுறைதரு பதியுல கினினல
கணமரு வியசிவ புரநினை பவரெழி லுருவுடை யவர்களே.

ஐந்தாம் திருப்பாட்டில் தடுத்துக்காக்கும் தனிப் பேராண்மை சாற்றப்பட்டுள்ளது. அதன் பயனாக இத் திருப் பாட்டில் 'தன்னுணர வேண்டித் தனதுரு வைத்தான் கொடுத்' தருளும் சிவபெருமானின் திருவுருவினை எய்துவர் என்பது பெறுகின்றது. சிவபெருமான் திருவுருவென்பது ஐந்தெழுத் தேயகமாம் ஆற்றுதிரு நீறுமணி, முந்துபுறம் தெய்வவுரு மூன்; என்பதாம்.

௧௧. திகழ்சிவ புரநகர் மருவிய சிவனடி யிணைபணி சிரபுர
நகரிறை தமிழ்விர கனதுரை நலமலி யொருபது நவில்பவர்
நிகழ்குல நிலநிறை திருவுரு நிகரில கொடைமிகு சயமகள்
புகழ்புவி வளர்வழி யடிமையின் மிகைபுணர் தரநல மிகுவரே.

இத்திருப்பாட்டின்கண் கல்வி, திரு, கொடை, செயம், அடிமை என்னும் ஐந்தும் எவர்க்கும் எய்தற் கரிய அரும் பொருள் இவற்றைச் சிவபுர நினையுஞ் சீர்த்திமிக்கோர் எளிதின் எய்துவரென்புது ஓதியருளப்பட்டது. இவ் விழாவின் சிறப்புப் பார்ப்பதியை வணங்கி வழிபடுவதாகும். அத் திருவருளம்மை செந்தமிழ்த் திருமுறையினைப் பாடியருளும் சீருடையளாவள். அவள் திருக்கையில் ஏடு தாங்கி நிற்கும் பீடு திகழும். அவ்வேடு செந்தமிழாகமம் ஆகும். என்னை? அத்திருவருளம்மை கேட்டருளியது எண்ணிலா ஆகமம் ஆகும். அத் தமிழாகமத்தின் படியே அம்மை சிவபெருமானை வழிபட்டருளினர். சிவபெருமானும் தழுவக் குழைந்து தன்விழுப் பேற்றினை யளித்தருளினன். கலைமகள் விழாவில் காதலித் தோதவேண்டிய திருமந்திரத் திருப்பாட்டு வருமாறு:

ஏடங்கை நங்கை இறைஎங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்புவெண் டாமரை
பாடுந் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த் தோத்திரஞ் சொல்லுமே.

—௧0. ௧௦௪௩.

இத்திருப்பதிகத்தின் குறிப்புக்களை நினைவு கூருமாறு வெண்பாக்களிற்றருதும்:

நுண்ணைந் திருத்தொழில்கள் நோக்கா வணிமுதலா
எண்ணைந்து திங்கள் இருதிங்கள்—கண்ணு
பிறப்புஞ் சிறப்புமாம் பேசு பருமை
உறப்பங் குனிமுதலாம் ஓர்.

கல்வியொடு செல்வம் கருதுபயன் கட்டொழுக்கம்
நல்லுணர்வஃ துள்ளகுலம் நற்குலத்தில்—வல்லவா
தோன்றல் சிவவுலகத் தோய்வு வழிவளர்வு
ஆன்ற சிவனடிக்கீ ழார்வு.

ஐம்பாவால் ஐந்தொழிலாம் ஆறிற் குலநிலனாய்
இம்பரிடை நானெறியும் எழினும்—நம்பும்
வழிப்பேரெட் டாமவர்கால் வழியொன் பானும்
விழுப்பேறும் பத்தில் விளம்பு.

டாக்டர் கமில் சுவலபில் அவர்களுக்கு வரவேற்பு

செக் நாட்டுச் செந்தமிழ்க் காதலர் திரு கமில் சுவலபில் அவர்களுக்கு 14-9-62 இல் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் சார்பாக மறைமலையடிகள் நூல் நிலையத்தில் ஒரு வரவேற்பு அளிக்கப் பெற்றது; சிற்றுண்டிவிருந்திற்குப்பின்பு கழகத்தின் ஆட்சியாளர் வ. சுப்பையா பிள்ளை அவர்கள் திரு கமில் சுவலபில் அவர்களுக்கு 'நிரம்ப அழகிய தமிலர்' என்ற செந்தமிழ்ப்பெயரைச் சூட்டினார். இவ்வரவேற்பு விழாவிற்கு டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் எம். எல். சி. அவர்கள் தலைமை தாங்கினார். விழாவில் டாக்டர் மு. வரதராசன், முன்னாள் மேயர் திரு. ஆ. சீனிவாசன், ஆ. சுப்பையா பிள்ளை, அமிர்த கணேச முதலியார், மயிலை சீனி வேங்கடசாமி, ஸ்ரீ பால் முதலிய பல பெருமக்கள் கலந்து கொண்டனர்.

விழாவிற்கு வந்திருந்தோரனைவரையும், விருந்தினரையும் வரவேற்றுப் பேசிய திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள் குறிப்பிட்டதாவது :

மெய்யன்பர்களே,

இன்று செக்நாட்டுப் பேரறிஞர் கமில் சுவலபில் அவர்கள் இங்கே எழுந்தருளியிருக்கிறார். அவர் பன்மொழி யறிஞர். அவர் தமிழ்படித்த வரலாற்றை அறிவதற்குப்பல கேள்விகள் கேட்டிருக்கிறோம். பதில் சொல்லப் போகிறார்.

தமிழ் இனிய எளிய தூயமொழி. அதனால் சூரிய நாராயண சாத்திரியாரும், சுவாமி வேதாசலமும் தங்கள் பெயர்களைமுறையே பரிதிமாற் கலைஞன் என்றும், மறைமலையடிகள் என்றும் மாற்றி வைத்துக் கொண்டனர். உருசியாவில் இருக்கும் தமிழன்பர் 'ரூடியன்' என்பவர் செம்பியன் என்று நல்ல தமிழ்ப் பெயரை வைத்துக் கொண்டார். வங்கநாட்டு மொழியறிஞர் எஸ். கே. சட்டர்ஜி அவர்கள் 'நன்னெறி முருகன்' என்று தமிழில் கையெழுத்திடுகிறார். அப்படித் தமிழ் கற்றோர் தங்கள் பெயரும் தமிழிலேயே அமைய வேண்டுமென விரும்புவது இயல்பே. நேற்றுத் தொலைபேசியில் திரு கமில் சுவலபில் அவர்களிடம் அவர் பெயருக்கு என்ன பொருள் என்று கேட்டேன். அவர் 'சுவலபில்' என்பதற்கு 'To make everything better, to make everything more perfect; more beautiful' என்று கூறினார்.

கமில் என்பது ஒரு முனிவரின் பெயர் என்று கூறினார். எனவே கமில் என்பதை அப்படியே வைத்துக் கொண்டு 'சுவலபில்' என்பதற்கு 'நிரம்ப அழகிய' என்ற மிகவும் பொருத்தமான பெயரைத் தேர்ந்தெடுத்து 'நிரம்ப அழகிய கமிலர்' என்ற பெயரைச் சூட்டலாம் என்று கருதினேன். நிரம்ப அழகிய தேசிகர் சிவஞான சித்தியாருக்கு உரையெழுதிய அறுவரில் ஒருவர். சேது புராணம் இயற்றி யிருக்கிறார். 'கமிலை'ப் போலவே 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முனிவர். அதுவும் ஒரு பொருத்தம். இச் செந்தமிழ்ப் பெயரடங்கிய பட்டயத்தைத் தலைவர் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் செக் நாட்டறிஞருக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(பட்டயம் படித்து அளிக்கப்பட்டது):

கூடியிருந்தோர் கைதட்டி மகிழ்ச்சி தெரிவித்தனர். டாக்டர் கமில் சுவலபில் அவர்களும் பெருமகிழ்ச்சியுடன் புதுப் பெயரை ஏற்றுக்கொண்டார். பின்பு டாக்டர் அ. சிதம்பர நாதன் செட்டியார் அவர்கள் உரையாற்றினார்:

"நண்பர்களே, கெழுதகை நண்பர் செக்நாட்டுப் பேரறிஞர் அவர்களுக்கு 'நிரம்ப அழகிய' என்னும் பெயர் இன்று சூட்டப் பட்டிருக்கிறது. கான்ஸ்டான்டைன் பெஸ்கி அவர்களுக்குத் தைரியநாத சுவாமி அல்லது வீரமா முனிவர் என்று தமிழ் மக்கள்தாம் பெயர் சூட்டினர்.

டாக்டர் கமில் அவர்கள் நான்கு ஆண்டுகட்கு முன்பு வந்து தமிழ் மணம் பரப்பினார். மேனாடுகளில் தமிழ் இனம், மொழி, இலக்கியம் பற்றி என்ன கருதுகின்றனர் என்பதுபற்றித் தமிழ் நாடு முழுதும் குரல் எழுப்ப விழைந்தார். ஏதோ காரணத்தால் அப்போது எதிர்பார்த்த அளவு தங்க வாய்ப்பு நேராமல் போய் விட்டது. இப்போது பெரும் பேறாகக் கிடைக்கப் பெற்றோம்.

சென்னை மாநிலத்தின் அளவுதான் செக் மாநிலம். ஏறக் குறைய ஐம்பதாயிரம் சதுரமைல் பரப்பளவுடையது. மக்கள் காரணமாகவே நாடு மதிக்கப்பெறும். உலக மொழிகளுள் இரண் டொன்றுதான் ஒலி வடிவமும் வரிவடிவமும் ஒத்திருக்கின்றன. பொஹீமியன், ஸ்லவானிக் மொழிகள் அவ்வகைப் பட்டவை: செக் மொழியும் பேசுவதற்கு ஒப்ப எழுத்து வடிவம் பெற்றுள்ளது. தமிழ் ஒருகாலத்தில் அவ்வாறு இருந்தது. செக் மொழியில் 42 எழுத்துக்கள் (ஒலிகள்) உள்ளன. இவற்றுள் சிறப்பான உயிர் எழுத்துக்கள் நம் மொழியில் உள்ளது போலவே பத்துத் தான். தமிழில் போலவே குற்றெழுத்து நெட்டெழுத்து வேறுபாடு கொண்டது. 16 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு வளர்ந்

தோங்கிய மொழி. செக் நாட்டிலும் நம்நாட்டிற் போலவே வேளாண்மையும் கைத்தொழிலும் சிறப்பான தொழில்களாகும்.

டாக்டர் கமில் அவர்கள் நம்மொழியைத் துருவியாராய்ந்து அறிய உழைத்து வருகிறார். பழந்தமிழிலக்கியத்தை மொழி பெயர்த்திருக்கிறார். அதே போலச் செக் மொழியிலிருந்து சில சிறந்த நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.''

அடுத்துத் திரு வ. சுப்பையா பிள்ளையவர்கள் பின்வரும் கேள்விகளைக் கேட்க டாக்டர் கமில் அவர்கள் தமிழிலும் ஆங் கிலத்திலும் தக்க பதில் கூறினார். அவை வருமாறு :

1. கேள்வி : தங்கள் பிறந்த நாள் எது?

பதில் : 1927 ஆம் வருடம் நவம்பர் மாதம் 17 ஆம் தேதி.

2. கேள்வி : தாங்கள் பிறந்த ஊர் எது?

பதில் : பிராகா மாநகரம்.

3. கேள்வி : தங்களுடைய பெற்றோர் பெயர் என்ன?

பதில் : எங்கள் அப்பா பேரு கமில் சுவேலபில்; அம்மா பேரு மரியம்மா.

4. கேள்வி : தாங்கள் பள்ளியில் எத்தனை மொழி படித்தீர்கள்?

பதில் : செக், இலத்தீன், கிரீக்கு, ஜெர்மன், ரஷ்யன் ஆக ஐந்து மொழிகள்.

5. கேள்வி : தற்பொழுது தங்கள் நாட்டில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவர்கள் எத்தனை மொழி படிக்கிறார்கள்?

பதில் : பள்ளிகளில் செக் மொழியும் ரஷ்யனும் படிக்கிறார்கள். கல்லூரிகளில் செக்கும், ரஷ்யனும் அவற்றுடன் ஆங்கிலமோ, ஜெர்மனோ, பிரெஞ்சோ, இலத்தீனோ படிக்கிறார்கள். ஆக மூன்று மொழி படிக்கின்றனர்.

6. கேள்வி : கல்லூரியில் பட்டப்படிப்பிற்குத் தாங்கள் எடுத்துக் கொண்ட பாடம் எது?

பதில் : எங்களூரிலே கல்லூரி கிடையாது. பள்ளிக் கூடத்தில் 12 வருடம் படிப்பு. பிறகு சர்வகலா சாலை.

7. கேள்வி : தங்களுக்கு டாக்டர் பட்டம் எதற்காகக் கிடைத்தது?

பதில் : சர்வகலாசாலையில் சமஸ்கிருதம் படிச்சு டாக்டர் பட்டம் வாங்கினேன்.

8. கேள்வி : தாங்கள் பெற்ற பிற பட்டங்கள் எவை?

பதில் : நான் பெற்ற பட்டம் "விஞ்ஞானப் பெரும் புலவர்", என்பது. எங்கள் நாட்டில் "டாக்டர்" பட்டத்தினும் மேலான பட்டம் இது.

9. கேள்வி : தங்களுக்குத் தெரிந்த பிற மொழிகள் எவை?

பதில் : எனக்கு நல்லாத் தெரிஞ்ச மொழிகள் கிரீக்கு, லத்தீன், ஜெர்மன், இங்கிலீஷ், ரஷ்யன், சமஸ்கிருதம். கொஞ்சம் தெரிந்தமொழிகள் மலையாளம் இந்தி, பிரெஞ்சு, இத்தாலியன், போலிஷ், தமிழ்.

10. கேள்வி : தமிழ் மொழியைப் பற்றி முதலில் எப்படி அறிந்தீர்கள்? அதைக் கற்க வேண்டும் என்ற அவா எப்படியெழுந்தது?

பதில் : இந்தியாவின் தெற்குப்பக்கத்து மொழிகளைப் பற்றி, ஊர்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஆசிரியர்களைக் கேட்டபோது அவர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. நாம் ஏன் தெரிந்துகொள்ளக் கூடாது என்று அறிந்து கொள்ள முயன்றேன்.

11. கேள்வி : ஆசிரியர் ஒருவர் உதவியின்றித் தாங்கள் எப்படித் தமிழைக் கற்றீர்கள்? என்னென்ன தமிழ் நூல்களை முதலில் கற்றீர்கள்? பின்னர்த் தாங்கள் படித்த நூல்கள் எவை? தங்கட்குப் பிடித்தமான நூல்கள் எவை?

பதில் : எங்களூரில் இந்தியத் தூதுவராக ஒரு தமிழர் இருந்தார். அவர்கள்தாம் எனக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். ரேடியோ மூலமாகவும், சில புத்தகம் மூலமாகவும் படித்தேன். தமிழைப் பற்றிப் பிரெஞ்சில் எழுதிய ஒரு புத்தகம் உதவியாயிருந்தது. (Pierre Meile) என்பவர் எழுதிய (Introduction au Tamoul) என்பது தான் அப்புத்தகம்.

12. கேள்வி : தாங்கள் செக் மொழியில் தமிழிலிருந்து மொழி பெயர்த்துள்ள நூல்கள் எவை? இனி மொழி பெயர்க்க எண்ணியுள்ள நூல்கள் எவை?

பதில் : 'சங்கப்பாட்டுக்களின் தொகுப்பு', 'பரமார்த்த குருகதை' திரு. ரகுநாதன் எழுதிய 'பஞ்சும் பசியும்' இவற்றை மொழி பெயர்த்தேன். சிலப் பதிகாரத்தையும் மொழிபெயர்த்திருக்கிறேன். இனிமேல் கல்கியின் 'அலேயோசை', 'சிவகாமியின் சபதம்' டாக்டர் மு. வ. அவர்களின் 'கரித்துண்டு' இவற்றைப் பெயர்க்கப் போகிறேன்.

13. கேள்வி : காலமுறைப்படி அந் நூல்களைக் கூறமுடியுமா?

பதில் : வரிசைப்படுத்திச் சொல்லவா? அலேயோசை, சிவகாமியின் சபதம், கரித்துண்டு.

14. கேள்வி : தாங்கள் வெளியிட்ட ஒவ்வொரு நூலிலும் எத்தனை படிகள் இதுவரை விற்பனையாகியுள்ளன?

பதில் : சங்க இலக்கியப்பாட்டுக்கள் ஐயாயிரம் படிகள்; பஞ்சும் பசியும் முப்பதாயிரம் படிகள் அச்சிடப் பட்டன. சிலப்பதிகாரம் பத்தாயிரம் படிகள் அச்சிடப்படும். எல்லாம் சீக்கிரத்திலேயேவிற்றுப் போகின்றன.

15. கேள்வி : செக் மொழி பேசும் மக்களின் தொகை என்ன?

பதில் : பதினுறு மில்லியன். (ஒரு கோடி நாற்பது லட்சம்)

16. கேள்வி : பல மொழிகள் பயின்றுள்ள நீங்கள் தமிழ் மொழியில் என்ன தனிச் சிறப்பைக் காணு கிறீர்கள்?

பதில் : தமிழின் இனிமை, இலக்கண வரம்பு; ஆயிரக் கணக்கான வருஷங்களாகத் தமிழ் வாழ்ந்து வருகிறது. இவைதான்.

17. கேள்வி : தமிழ் மொழிமேல் தாங்கள் இந்த அளவு விருப் பம் கொள்ளுமளவிற்குத் தங்களை ஈர்த்தது எது?

பதில் : நான் முன்னே சொன்ன காரணங்களே தமிழுக்கு என்னைக் கவர்ந்தன.

18. கேள்வி : செக் நாட்டில் தாங்கள் எத்தனை ஆண்டுகளாகத் தமிழ் கற்பித்து வருகின்றீர்கள் ?

பதில் : மூன்று வருஷங்களாக.

19. கேள்வி : இதுவரை எத்தனை பேர் தங்களிடம் தமிழ் படித்திருக்கிறார்கள் ?

பதில் : மூன்று பேர்தான் படித்து வருகிறார்கள்.

20. கேள்வி : தமிழில் பட்டப்படிப்பு இருக்கிறதா ?

பதில் : இனி ஆங்கிலத்திலேயே பதில் சொல்ல விரும்புகிறேன் : பதில் கூறுவதற்குச் சிறிது கடினமான கேள்விகள். இக்கேள்விக்குப் பதில். ஆம். இருக்கிறது. அம்மூன்று மாணவர்களும் தங்கள் படிப்பை முடித்த பிறகு பி. ஏ., பட்டம் பெறுவார்கள்.

21. கேள்வி : பொழுது போக்கிற்காகத் தங்களிடம் தனிப்பட்ட முறையில் யாரும் தமிழ் படித்துள்ளார்களா ?

பதில் : ஒருவருமில்லை.

22. கேள்வி : தமிழ்மொழியைப்பற்றித் தங்கள் பல்கலைக் கழகத்திலுள்ள பிற பேராசிரியர்கள் என்ன கருத்துக் கொண்டுள்ளனர் ?

பதில் : பதில் கூறுவதற்கு மிகவும் கடினமான கேள்வி. உண்மையில் எங்கள் பல்கலைக் கழகத்தில் ஓர் ஒலியியல் பேராசிரியர் இருக்கிறார். அவரிடம் நான் தமிழ் ஒலி வடிவங்களைப் பொறிகள் மூலம் பதிப்பித்துக் காட்டினேன். தமிழுக்கே உரிய "ழ" கரத்தை உச்சரித்து அப்படத்தைக் காட்டியபோது மிகவும் வியந்தார். அவ்வெழுத்தை உச்சரிக்கும்போது நாக்கு மிகவும் நன்றாக மடிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட ஒலியை அவர் அதற்குமுன் கேட்டதில்லை. உண்மையில் இது தமிழின் ஒரு தனிச்சிறப்புத் தான்.

23. கேள்வி : முதலில் நீங்கள் தமிழ் நாட்டிற்கு வருவதற்கு முன் தமிழர்களைப் பற்றியும் தமிழ் நாட்டைப் பற்றியும் என்ன எண்ணியிருந்தீர்கள் ?

பதில் : இங்கே வருவதற்கு முன்பு இங்குள்ள மக்களைப் பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாது. எங்கள் நாட்டில் தமிழ் நாட்டைப் பற்றிய புத்தகங்களும் இல்லை. பேராசிரியர்களுக்கும் ஒன்றும் தெரிய வில்லை. ஐம்பது அல்லது அறுபது வருடங் களுக்கு முன் வெளியிடப்பட்ட கல்வெட்டு நூல் களிலிருந்தே ஒருவாறு தமிழ் நாட்டைப்பற்றி அறிந்தேன். ஆனால் நான் மனத்தில் ஊகித்துக் கொண்டிருந்த தமிழ்நாட்டிற்கும், நேரில் பார்க் கும் தமிழ் நாட்டிற்கும் எவ்வளவோ வேறுபாடு கள் உள்ளன.

24. கேள்வி : தமிழ்நாட்டிலிருந்து முன்பு திரும்பிச் செல்லும் பொழுது என்ன எண்ணத்தோடு சென்றீர்கள்?

பதில் : தமிழர்களின் ஒரு குணத்தை மிகவும் பாராட்டி னேன். அக்குணத்தை உலகத்தில் உள்ள மற்ற எல்லா நாடுகளும் மேற்கொள்ளவேண்டும். தமிழர்கள் தங்கள் மொழிமீதும், பண்பாட்டின் மீதும் காதல் கொண்டிருக்கின்றனர். இது உண் மையில் ஒரு தனிச்சிறப்புத்தான். இன்னொரு பண்பு : மூத்தோரிடத்துச் சிறியவர்கள் அன்பும் பணிவும் உடையவராயிருக்கின்றனர்; ஆசிரியர்க ளிடத்து மாணவர்கள் மிகவும் பணிவுடன் இருக்கின்றனர். எங்கள் நாட்டில் மாணவர்கள் தங்கள் படிப்பு முடிந்தவுடனேயே ஆசிரியரை உயர்வாக மதிப்பதில்லை. தாமே ஆசிரியரைக் காட்டிலும் அதிகம் அறிந்தவராகவும் எண்ணிக் கொள்ளுகின்றனர். உங்கள் நாட்டில் வாழ்க்கை யில் மிக மேலான நிலையில் இருப்பவர்களும் தங்கள் ஆசிரியரிடத்திலும், குருமார்களிடத்தி லும் மிகவும் மரியாதையுடன் நடந்துகொள்கிறார் கள். இப்பண்பை உலகத்தினரெல்லாம் பின்பற்ற வேண்டும்.

25. கேள்வி : தமிழ்மொழிக்குத் தாங்கள் செய்யத் திட்ட மிட்டிருக்கும் தொண்டுகளைப் பற்றிக் கூறுங்கள்.

பதில் : முதல் திட்டம் "வரலாற்றுத் தமிழ் இலக் கணத்"தை வெளிக் கொணர்வது. சோவியத் தோழர்களுடன் சேர்ந்து உழைத்து வருகிறேன். இது மிகவும் முக்கியமான பணி. அவ்விலக்கணம்

முற்றமுடிந்த முடிபாகக் கொள்ள முடியாது போயினும் ஒரு முதல் முயற்சியாகக் கருதப் படும். அடுத்துக் கிளை மொழிகள் (வட்டார, சமுதாயக் கிளை மொழிகள்) பற்றியும் பேச்சு வழக்கைப் பற்றியும் ஆராய்ந்து தமிழ் மக்களின் உதவியுடன் அவற்றை அகராதி உருவில் வெளி யிடுவதாகும்.

26. கேள்வி : செக் மொழியின் இலக்கிய வளத்தைப்பற்றிக் கூறுங்கள். அம்மொழியில் சிறந்த நூல்கள் எவை? அம்மொழியில் உள்ள கவிதை, காப்பியம் கதை, கட்டுரை ஆகியவற்றில் எதையாவது தமிழில் மொழி பெயர்த்துத் தருவீர்களா?

பதில் : இதற்கு முழு விடை கொடுப்பதற்குப் பல மணி நேரம் வேண்டும். எங்கள் நாட்டு மிகச்சிறந்த மூன்று ஆசிரியர்களை டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் எடுத்துக்கூறியதைக் கேட்டு மிக வியப்படைந்தேன். செக் மொழியி லிருந்து நூல்கள் மொழிபெயர்ப்பதற்குத் தமிழ் மக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. எங்கள் நாட்டு நூல்களிலும் கவிதைகளிலும் சில உங்களுக்குச் சுவை உடையனவாகத் தோன்றலாம். ஒரு பெரிய கொள்ளைக்காரனைப் பற்றிய கதை தெலுங்கில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. அதை எல்லோரும் விரும்பிப் படிக்கின்றனர். தூக்குமேடைக் குறிப்பு என்ற நூல் தமிழில் வெளிவந்திருக்கிறது. இன்னும் ஓரிரண்டு செக் நூல்கள் தமிழில் வெளிவந்திருக் கின்றன.

27. கேள்வி : தமிழ் வளர்ச்சி பற்றித் தமிழர்கள் என்னென்ன செய்ய வேண்டும் என்று எண்ணுகிறீர்கள்?

பதில் மிகவும் சிக்கலான கேள்வி. எனினும் பதில் சொல்ல முற்படுகிறேன். தனித்தமிழ் மாநில மாகப் பிரிக்கப்பட்டிருக்கும் தமிழ் நாட்டில் தமிழானது முழுவளர்ச்சியுற்ற ஒரு தேசிய மொழியாக வளர்ந்து வருகிறது. இத்தேசிய மொழியை வளர்ப்பதற்குத் தமிழர்கள் விழிப் புடன் முனைந்து செயலாற்ற வேண்டும். இலக் கியத் தமிழோடு மக்கள் மொழியான பேச்சுத்

தமிழையும் இணைத்து—பேச்சு வழக்கையும் இலக்கண - இலக்கியத் தமிழையும் சேர்த்து—ஒரு தனித் தேசிய மொழியாக வளரச் செய்ய வேண்டும். இதற்குத் தமிழர்களே முழுக் கவனத்தையும் செலுத்தி முழுமுயற்சி செய்யவேண்டும்.

தமிழ் ஆட்சிச் சொற்கள், நுண்கலைச் சொற்கள், அறிவியல் சொற்கள் முதலிய எல்லாவற்றின் கருத்துக்களையும் வெளிப்படுத்துந் தகுதி பெற்றது என்றே நான் நன்முக நம்புகிறேன். எதையும் தமிழில் சொல்லமுடியும். ஏறத்தாழ நூற்று நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு மொழியின் நிலையைப் பற்றியவரை செக் மொழியும் இக்காலத் தமிழைப் போலவே இருந்தது. எங்கள் நாட்டு அறிஞர்கள் ஜெர்மனியிலும், லத்தீனிலுமே நூல்கள் எழுதி வந்தனர். ஆனால் நாற்பதாண்டுகளுக்குள் எல்லோரும் முயன்று ஓர் உயர்ந்த மொழியாகச் செக் மொழியை வளரச் செய்தனர்.

இப்போது செக் மொழியில் எக்கருத்தையும் வெளிப்படுத்த முடியும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை எல்லாப் பாடங்களும் செக் மொழியிலேதான் சொல்லித்தரப்படுகின்றன. சோவியத் ஒன்றியத்தில் ரஷ்யன் தான் ஆட்சிமொழி. ஆனால் டார்டார், ஆர்மீனியன், ஜ்யார்ஜியன் முதலிய பல மாநிலங்கள் தங்கள் மொழிகளிலேயே பல்கலைக் கழகப் பாடங்களைச் சொல்லி வருகின்றன. தமிழும் முழுவளர்ச்சியுற்ற மொழியாக விரைவில் திகழவேண்டும் என்று விரும்புகிறேன்.

28. கேள்வி : தமிழின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்?

பதில் : எதிர்காலத்தைப் பற்றிக் கூறவேண்டுமானல் கடந்த கால வரலாற்றைக் காணவேண்டும். தமிழுக்குச் சிறந்த மூவாயிர ஆண்டுக்கால வரலாறு உள்ளது. எத்தனையோ படையெடுப்புகள், திணிப்புக்கள் இவற்றிற்கு ஈடு கொடுத்து வந்திருக்கிறது. தமிழின் எதிர்காலமும் ஒளிமிகப் படைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை. எதிர்காலத்தில்

பொது மக்களின் பேச்சு மொழிக்கும் முதன்மை கொடுக்கவேண்டும். தமிழைத் தேசிய மொழி யாக்குவதில் இலக்கியத் தமிழோடு பேச்சுத் தமிழுக்கும் பங்குண்டு.

29. கேள்வி : தமிழ் மொழியில் இன்னும் என்னென்ன துறை கள் வளரவேண்டும்?

பதில் : புதிய சொற்களை உண்டாக்கிக்கொள்ளலாம். ஆனால் சொற்களை உண்டாக்கவேண்டும் என்பதற் காகவன்றிக் கருத்துக்களுக்காக உண்டாக்க வேண்டும். செக் நாட்டில் நாங்கள் பல ஆங்கிலச் சொற்களை அப்படியே எடுத்துக்கொண்டிருக் கிறோம். ஆனால் "வானொலி" என்ற அழகான சொல்லிருக்கும்போது ஆகாஷ்வாணி என்று சொல்லுவது வேண்டத்தக்கதன்றுதான். நுண் கலைத்துறைகளைப் பற்றியவரை நாங்கள் ஆங்கிலம், கிரீக்கு, லத்தீன், ஜெர்மன் ஆகிய மொழிகளி லிருந்தும் வடமொழியிலிருந்தும் கூடச் சொற்களை வாங்கிக் கொள்ளுகிறோம். ஏன் அப்படி வாங்கக்கூடாது? ஒரு மொழி பலவகை யான சொற்களைக் கடன்பெற்றே வளம் எய்து கிறது. வடமொழியும் கடன் பெறுதற்குரிய ஒரு மொழிதான். எல்லா வடசொற்களையும் ஏன் அறவே நீக்கவேண்டும்? திராவிட வேர்ச் சொற்களைக் கொண்டு புதிய சொற்களை உண் டாக்க முடியுமானல் நல்லது. அப்படியே செய்ய லாம். ஆனால் அவ்வாறு முடியாது போனால் உலகத்தின் பிற மொழிகளிலிருந்து சொற்களைக் கடன் பெறலாம். பேச்சுத்தமிழில் எந்தத் துறை யைப் பற்றியும் விளக்கங் கொடுக்கமுடியும்; எந்த விஞ்ஞானத்துறையையும் தமிழில் கற்பிக்க முடியும்.



சென்னை, கந்தகோட்டம் திரு முத்துக்குமாரசுவாமி
திருக்கோயிலில் அருட்கவியார் பாடுதல்



மத்திய அரசு அமைச்சர்கள் திரு. சி. சுப்பிரமணியம், திரு. ஒ. வி.
அளகேசன் ஆகியோர் அருட்பாடல்களைக் கேட்டின்புறுதல்



ஒவ்வொரு அருட்பாடல் முடிவின்கண்ணும் அருட்கவியின்
முகத்தில் தோன்றும் அருளொளி

மறைமலையடிகள் நூல்நிலையத்தினருகிலுள்ள பிள்ளையார் கோயிலில்
அருட்கவியாரவர்கள் பாடுவதை செக்நாட்டுத்
தமிழறிஞர் வியப்புடன் கேட்பது

அருட்புகழ்

சென்ன மல்லீசுரர் திருக்கோயில்
திருவருள் நிகழ்ச்சிச் செந்தமிழ்ப் பாடல்கள்

(செல்வி சிலம்பு கூஎ, பரல் க, உ0 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரமராம்பிகை திருமுன்

நேரிசநோடி] எழுசீரடியாசிரிய விருத்தப் பதிகம் [ரூபகம்

(“மற்றுப் பற்றெனக்கு” என்ற சுந்தரர் தேவார இலக்கணம்)

15

தாப ரத்தொடு சங்க மங்கள் சராச ரங்கள் அனைத்தும்நீ
சீபி ராமி மகேசை நாரணி தேவி வைணவி யாவுநீ
கோபு ரத்தொடு மாட மாளிகை கூட நீடுறு சென்னையில்
மாபெ ருஞ்சென மல்லி கேச்சுர வண்டு வாழ்குழ லம்மையே! (1)

(15) *தாபரம் - தாவரம்; அசையாப் பொருள்கள். சங்கமங்கள் - அசையும் பொருள்கள். சரம் - அசையும் பொருள். அசரம் - அசையாப்பொருள். சீ பிராமி - பிரம சக்தி. மகேசை - ஈச சக்தி. நாரணி - விட்டுணு சக்தி. தேவிவைணவி - வைணவிதேவி.*

16

ஞாயி றென்றொளிர் மேனி யாய்! திரு நார ணன்திருத் தங்கையே!
ஆயி ரம்பெயர் ஓதி நாடொறும் அன்பர் தாந்தொழு மன்னையே!
காயி ரும்பொழிற் சென்னை யில்மயி லாப்பிற் கற்பகக் கன்னியே!
மாயி ருஞ்சென மல்லி கேச்சுர வண்டு லாங்குழ லம்மையே! (2)

(16) *காய் இரும் பொழில் - காய்த்துள்ள பெரிய சோலை. மயிலாப்பு - மயிலாப்பூர். கற்பகக் கன்னி - கற்பகாம்பிகை. மாயிரும்-மிகப் பெரிய.*

17

ஆர்வ மென்பதொர் பூவி னாலுனை அர்ச்ச னைசெயக் கற்றிலேன்
மார்வ மென்பதொர் கோயி லுள்வைத்து வந்த னைசெயக் கிற்றிலேன்
பார்வ தி! பர மேசு ரீ! எனப் பாடி லேனைப் படைத்ததேன்?
வார்க டற்சென மல்லி கேச்சுர வண்டு வாழ்குழ லம்மையே! (3)

(17) *ஆர்வம் - அன்பு. மார்வம் - மார்பு; கிற்றிலேன் - ஆற்றலில்லாதவன். ஆர்வமென்பதொர்.........கிற்றிலேன்: “மார்வம் என்பதோர் கோயில் அமைத்து மாதவன் என்னும் தெய்வத்தை நாட்டி ஆர்வமென்பதோர் பூ இட வல்லார்க் கரவதண்டத்தில் உய்யலுமாமே”—பெரியாழ்வார் திருமொழி (“சோர்வினாற் பொருள்”). பாடிலேனை - பாடாதவனாகிய என்னை.*

18

**இந்து சேர்சடை எந்தை யோர்புறம் என்றும் வீற்றிருக் கின்றநீ
முந்து சேரென துள்ள மாந்தளி முத்தி சேர்ப்பதன் காரணம்;
பந்து சேர்விர லாய்!செ ழுஞ்செய பஞ்சை யூட்டமெய்ப் பாங்கிமார்
வந்து சேர்சென மல்லி கேச்சுர வண்டு லாங்குழ லம்மையே! (4)**

(18) இந்து - சந்திரன். முந்து - முதலாவதாக; முந்திக் கொண்டு வந்து. முந்து சேர் - முன்பே வந்து வீற்றிருப்பாயாக. தளி - கோயில். முத்தி சேர்ப்பதன் காரணம் - என்னை முத்தி வீட்டிற் சேர்க்கும் பொருட்டு. முத்தி சேர்ப்பதன் காரணம் நீ எனது உள்ளமாம் தளி முந்து சேர் எனக்கொண்டு கூட்டுக. பந்து சேர் விரல் - பூப்பந்தாடுங் கை விரல்: "பந்து சேர் விரலாள்" - சம்பந்தர் -260-1. செழும் செய பஞ்சை ஊட்ட - (திருவடிகளில்) செழுமையான செம்பஞ்சுக்குழம்பைப் பூசும் பொருட்டு. "பஞ்சுண்ட மெல்லடியாள்" - அப்பர் - 287-2.

19

**அன்பி லேனருள் பெற்றி லேனடி யாரொ டேகுலஞ் சுற்றிலேன்
துன்பி லேதடு மாறு மென்னைக் கை தூக்கி யாள்வதுன் பாரமே;
என்பி லேநெக உள்ளந் தானுரு கப்பு கழ்ந்திசைத் தேத்துவார்
வன்பி லார்சென மல்லி கேச்சுர வண்டு வாழ்குழ லம்மையே! (5)**

(19) குலம் - கோயில். வன்பு இலார் - கொடுமை இல்லாதவர். வன்பிலார் வாழ்த்துகின்ற சென்ன மல்லீச்சுரம் எனப் பொருள் கொள்க. 'வாழ்த்துகின்ற' என்பது இசையெச்சம். வன்பு - வல்லமை. வன்பில் ஆர் எனப்பிரித்து, கல்வி, பொருள், தருமம், இன்னும் பலவற்றி லும் வல்லமை பொருந்திய (மக்கள் வாழும்) சென்னை நகர் எனினும் பொருந்தும்.

20

**பாலை நேர்மொழி வேலை நேர்விழி பான லந்திரு வாய்மலர்
வாலை யே! என்றுங் கன்னி யே! மல்லி கார்ச்சு னத்தில் மலைச்சியே!
காலை யோடுச்சி வேலை மாலையுன் காலை யான்தொழச் செய்திடாய்!
மாலை யார்சென மல்லி கேச்சுர வண்டு லாங்குழ லம்மையே! (6)**

(20) வேலை சேர் விழி - வேல்போன்ற கண். வேலை - கடல் எனினுமாம். பானல் - குவளை மலர். வாலை - இளமையுள்ளவள். என்றுங் கன்னியே - "அகிலாண்ட கோடி யீன்ற அன்னையே! பின்னை யுங் கன்னியென மறை பேசும் ஆனந்த ரூப மயிலே" - தாயுமானுர் ("பூரணி"); "பால்மொழி கன்னி யாகும்" - சிவஞான சித்தியார் - சூத்திரம் 2-பாயி - 77. மல்லிகார்ச்சுனம் - ஸ்ரீ சைலம் என்னும் திருப் பருப்பதம்; இத்தலத்தில் தேவியார் திருப்பெயர் "வண்டார் குழலம்மை" என்பது; ஆதலால் 'வண்டுலாங் குழலம்மை' எனத் திருநாமங்கொண்ட சென்ன மல்லீசர் தேவியின் திருமுன் ஸ்ரீசைலம் நினைவுக்குக் கொண்டு வரப்பட்டது. மலைச்சி - மலைமகள்; பார்வதி. உச்சி வேலை - உச்சி வேளை. மாலை ஆர் - பூமாலை(க்கடைகள்) பொருந்திய; சென்ன

மல்லீசர் கோயில் வாயிலிற் பூமாலைகள் விற்பது நினைத்தற்குரியது; பூமாலை பூண்ட அம்மையே எனவுங் கொள்ளலாம்; "தார் கொண்ட சென்னையிற் கந்த கோட்டத்துள்" என்றார் வள்ளலாரும் (தெய்வமணி மாலையில்).

21

ஆழ்வு றுந்தொண்டர் நெஞ்ச கங்குடி யாகக் கொண்டுறை ஆதியே!
மாழ்கு றும்மடை யேனை என்றுசெவ் வாய்ம லர்ந்தருள் செய்வையோ?
தாழ்வு றும்படி அன்ப ரைவிடு தற்கொ ணாத தனித்தயை
வாழ்வு றுஞ்சென மல்லி கேச்சுர வண்டு வாழ்குழ லம்மையே! (7)

(21) ஆழ்வுறுந் தொண்டர் - (திருவடிப் பக்தியில்) ஆழ்வார்கள். மாழ்குறும் - மயங்கும். மடையேனை - மடையேனுக்கு; 4 ஆம் வேற்றுமைக்குப் பதிலாக 2 ஆம் வேற்றுமை வந்தமை உருபு மயக்கம்.

22

சிங்க ளத்திலும் ஈழ மும்பெருஞ் சீன முஞ்சொ லுஞ்சோன மும்
வங்க ளத்திலுஞ் சென்று சென்று வகைப்ப டப்பலர் தேடினும்
எங்க ளம்மைநின் போல வேறொரு தெய்வங் காண்டல் எளிமையோ!
மங்க ளச்சென மல்லி கேச்சுர வண்டு லாங்குழ லம்மையே! (8)

(22) சிங்களம் - இலங்கை (Ceylon). ஈழம் - யாழ்ப்பாணம் (Jaffna). சீனம் - சீனநாடு (China). சோனம் - சோனகம்;தேயமைம்பத்தாறினொன்று; யவனதேசம். "வங்காளஞ் சோனஞ் சீனம்" - திருப். 43. வங்களம் - வங்காளம் (Bengal). ஈழத்திலும் சீனத்திலும் சோனத்திலும் எனக் கூட்டுக.

23

ஆணி யம்பொனி னாற்செ யப்பெறும் அந்தத் தொட்டிலொத் தன்பையே
நாணி லேன்கட்டி வைத்து ளேன்வந்து நாளு மாடுதல் நன்மையே!
பேணி இந்திரை தேவர் கோன்மனை பேசில் மற்றும் பிரமனா
வாணி சேர்சென மல்லி கேச்சுர வண்டு வாழ்குழ லம்மையே! (9)

(23) ஆணி அம்பொன் - அழகிய ஆணிப்பொன். இந்திரை - இலக்குமி. தேவர் கோன்மனை - இந்திராணி. பிரமன்நா வாணி - பிரமன் நாவில் வாழ்பவள்; சரசுவதி. சேர் - தியானிக்கும். சேர்தல் - தியானித்தல்: "மலர் மிசை யேகினான் மாணடி சேர்ந்தார் நில மிசை நீடுவாழ் வார்" - திருக்குறள். (சேர்ந்தார் - தியானித்தார் - பரிமேலழகர் உரை.) பார்வதியை இலக்குமி, சசி, கலைமகள் முதலியோர் வழிபடுவது: "தவளரூப சரச்சுதி இந்திரை ரதி புலோமசை க்ருத்திகை ரம்பையர் சமுக சேவித துர்க்கை" - திருப்புகழ் ("குவளை பூசல்").

24

கண்ட மிழ்த்தெளக் காவ ருங்கட லூர்க்க விப்பட்டர் கட்டியம்
கொண்ட மிழ்த்தெளத் தண்ணி லாப்பொழி கோனைத் தாடங்கம் வீசியே
பண்ட மாவாசை யன்று காட்டினை பௌர்ண மித்தினம் என்பதாய்;
வண்ட மிழ்ச்சென மல்லி கேச்சுர வண்டு லாங்குழ லம்மையே! (10)

(24) கண்டு அமிழ்து - கற்கண்டும் அமிர்தமும். காவரும் கடவூர்- சோலைகள் நிறைந்த திருக்கடவூர். கவிப்பட்டர்-கவிஞராகிய அபிராமிப் பட்டர். கட்டியம் - இறைவனைப் புகழ்ந்து பேசுதல். இங்கு தேவியின் புகழாகிய அபிராமி அந்தாதிப் பாடல்கள். கொண்டு அமிழ்து என - அமிர்தம் போல ஏற்றுக் கொண்டு. தண் நிலாப்பொழி கோன் - குளிர்ந்த நிலவைப் பொழியும் சந்திரன். தாடங்கம் - ஒருவகைக் காதணி. அமாவாசை......என்பதாய்: "அமாவாசை யன்று பௌர்ண மித்தினம் என்பதாய்க் காட்டினை" எனக் கொண்டு கூட்டுக. இப்பாடலில் அபிராமிப் பட்டர் வாழ்க்கையில் நடந்த திருவருள் நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது. இவர் வரலாற்றை அபிராமி யந்தாதி நூலிற் காண்க.

25

நாட கத்தொடு நான்ந டிப்பது நன்கு நீயறி யாததோ
ஆட கக்கழல் காட்டி என்றனை ஆட்கொண் டாய்கொல்; மறதியால்;
பாட கச்சிலம் பாடு நூபுர வேத மார்பதப் பைரவி !
மாட மார்செண மல்லி கேச்சுர வண்டு வார்குழ லம்மையே! (11)

(25) நாடகத்தொடு நான் நடிப்பது: "நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து நான்" - திருவாசகம். ஆடகம் - பொன். மறதியால் ஆட்கொண்டாய் கொல்! - "நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய்" - அபி. அந் - 61. பாடகம் - மகளிர் காலணி. சிலம்பாடு நூபுர வேதம் - வேதச் சிலம் பாகிய நூபுரம். தேவியின் காலில் வேதநூபுரம் ஒலிப்பது: "ஆரண நூபுரம் சிலம்பும் அடிகள் போற்றி" - திருவிளை - பாயிரம் - மீனாட்சியம்மைதுதி. சிலம்பாடும் - ஒலிக்கும் எனினுமாம்.

26

அஞ்சி னேனை அடைக்க லம்மென் றுன் ஆத ரங்கொடுத் தாண்டனை!
எஞ்சி யான்செய்கைம் மாறு முண்டுகொல்! என்னை யீந்தநன் பின்னரும்;
கொஞ்சி யென்முனைப் போதும் நீவிளை யாடிக் கொண்டு குலவுவாய் !
வஞ்சி நேர்செண மல்லி கேச்சுர வண்டு லாங்குழ லம்மையே! (12)

(26) ஆதரம் - அன்பு; ஆதரவு. எஞ்சி - மிகுதியாக. என்னை ஈந்தநன் பின்னரும் - என்னையே உனக்குக் கொடுத்து விட்ட பிறகும். (நான் உனக்குக் கைம்மாறு செலுத்துவது என்பது ஒன்று உண்டா; எனக்கென்ன அதிகாரமிருக்கிறது இங்கு என்றபடி). வஞ்சி - வஞ்சிக் கொடி. வஞ்சி - கருவூர் எனவுமாம்.

முருகப்பெருமான் திருமுன்

27. அகப்பொருள்

வராளி] [ஆதி

தல்ல தய்யாதன தன்ன தய்யாதன
தன்ன தய்யாதன தனதான

உன்னை யல்லாதெவர் பின்னை யிவ்வேழையை
உன்னி மெய்யாயனை தருவார்சொல்-
உண்மை யிவ்வாறுள தென்னி லேயாபிற
ழொண்ண லெவ்வாறுசொல் உதவாதே;
பின்னை கையேவிடில் நண்ணு மையோ! பழி
பெண்ணி னல்லாளென இவள்பேசும்-
பெண்மை யெள்ளாதுணர் வெண்ணு சையோகமெய்
பின்ன உள்ளாவதும் எதுநாளோ;
தன்னை யல்லாதொரு தன்மை யில்லார் நதி
தண்மை யல்லாளிகொள் சடையாளர்-
தம்மு னெவ்வாவிதி பண்ணி னல்லூடுவை
சண்ணி மெய்யார்பொடி உடையாரெம்;
சென்னை மல்காலய மன்னு மல்லூரவர்
செம்மை ஐயாறுறை சிவஜோதி-
தென்ன வெள்ளேறினர் சென்னை மல்லீசுரர்
திண்மை இல்வாயுறை பெருமாளே. (1)

(27) ஏழை - ஏழைமைப் பட்டவள்; இந்தப் பெண். உன்னி - நினைவிற் கொண்டு. என்னில் - என்றால். பிறழொண்ணல் - மாறுபடுதல். பெண்மை எள்ளாது - பெண் தன்மையை இகழாது. உணர்வு எண்ணு சையோகம் - உணர்ச்சி கலந்த புணர்ச்சி. "உணர்வொடு புணர்வதும் ஒரு நாளே" - திருப். 516. மெய் பின்ன - உடலோடு உடல் ஒன்ற. உள்ளாவதும் - (நீ) உடன்படுவதும். தன்னையல்லாதொரு தன்மை இல்லார் - தானன்றிப் பிறி தெதுவும் இல்லாதிருப்பவர்; எல்லாம் தானாயிருப்பவர்:-

"தானே புணர்ந்து தானே அறிந்து...எந்தை" - திருப். 1220

நதி - கங்கை. தண்மை அல்லாளி - குளிர்ந்த சந்திரன். ஒவ்வா விதி பண்ணின் - நீதிக்குப் புறம்பானவற்றைச் செய்தால் (அப்படி நீதி தவறியவர்களை) அல்லூடு வை - இருளுலகத்தில் வைக்கின்ற. சண்ணி - சண்ணித்த; பூசிய.

மெய் ஆர் பொடி - உடலிற் பொருந்திய திருநீறு. சென்னை மல்கு ஆலயம் - சென்னையிலே நிறைந்த பல சிவாலயங்கள். அல்லூரம் - வில்வம். ஐயாறு உறை செம்மைச்சிவ சோதி - திருவையாற்றுச் செம்பொற்சோதீசுரர்: "திருவையாறகலாத செம்பொற் சோதீ" - அப்பர். தென்ன - அழகையுடைய. ஏறினர் - ஏற்றினர். திண்மை இல்வாய் - வலிமை பொருந்திய வீடாகிய கோயிலில்.

28. அருள்வாயே

யதுகுலநாம்போநீ] [ஆநீ

தனன தனத்தந் தானன தானன
தனன தனத்தந் தானன தானன
தனன தனத்தந் தானன தானன தனதான

பவமு மிறக்கும் பான்மையு மோய்தர
அருளை யளித்துன் பாதகு சேசய
படன இசைச்செம் பாடல்கள் பாடிட அருள்வாயே-
பணமு மினுக்கும் பாவைய ராசையும்
நிலமு மணிப்பொன் போகமும் நோய்தரு
பசியும் எனக்குண் டாகுத லேஅற அருள்வாயே;
தவமும் வழித்தொண் டாளர்கள் சேவையும்
நிதமும் நினைக்குந் த்யானமும் வாய்புகழ்
தமிழும் நிலைக்கும் தானமு மோனமும் அருள்வாயே-
தரணி மிகக்கொண் டாடினும் ஏசினும்
அவையொர் பொருட்டும் தீதுசெ யாவகை
தமியன் இனித்துன் தாள்தொழ ஞானம தருள்வாயே;
அவமது பற்றும் போரம ணுதியர்
கழுவினி லுற்றங் காதர வேயற
அழிதர வைத்தும் பாசுரம் ஓதியும் அருள்வோனே-
அறுமுக! கத்துங் கேதன சேவல!
குறுமுநி சித்தங் கோயில்கொள் காவல!
அடிய ருளத்துண் டாம்வினை தீரவை அயில்வேலா;
சிவமய முற்றுந் தேவர்கள் பாவிகள்
அவிதரு நக்கன் போர்மக மூடுசெல்
செலவு கெடுக்குந் தீரமு ளார்சென மவிகேசர்-
சினகர முற்றுஞ் சேரடி யார்தொழ
இனிதி னிருக்குஞ் சேவல! பாவலர்
தெளிதமிழ் சொற்றின் போடிசை நாவலர் பெருமாளே. (2)

(28) பவம் - பிறப்பு. பான்மையும் மோய்தர - தன்மையும் அழிய. மோய்தல் - அழிதல்: "முந்தை வினைமுழுதும் மோய உரைப் பணியான்" - சிவபுராணம். பாதகுசேசய படன இசை - திருவடித் தாமரைகளைப் பற்றிப் படிக்கும் சங்கீதம். பணம், மணி, பொன் - பொன்னாசை. பாவையராசை - பெண்ணாசை. நிலம் - மண்ணாசை. ஆக மூவாசைகள். நிலைக்கும் தானம் - நிலையான (நல்ல) பதவி. நிலையான தருமம் எனலுமாம். மோனம் - மவுனம். தரணி..... வகை: "சகம் பேய் என்று தம்மைச் சிரிப்ப, நாணது ஒழிந்து நாடவர் பழித்துரை பூணது வாக" திருவாசகம் - போற்றி - வரி - 68-70. "நாணம் அகற்றிய கருணை புரிவாயே" - திருப் ("ஈனமிகுத்") அவம் - வீணான செய்கைகள்; சிவம் அல்லாதன. அமணுதியர் - சமணர் முதலானோர். அவமது... வைத்தும் - சம்பந்தர் சமணர்களைக் கழுவேற்றியது: "சமணரைக் கழுவேற்றிய பெருமாளே" - திருப். 1286. பாசுரம் - 'வாழ்க அந்தணர்' எனத்தொடங்கும் சம்பந்தரது திருப்பதிகம். கத்தும் கேதன சேவல - "கொக்கறு கோகோ" எனக் கூவிக் குரல்கொடுக்கும் சேவற் கொடியோனே. குறுமுனி - அகத்தியர். அயில் - கூர்மை. சிவமயம் உற்றும் - எங்கும் சிவமயமாயிருந்தும் (இதை அறிந்திருந்தும்). தேவர்கள் பாவிகள் - சிவாபராதத்துக் குள்ளான பாவிகளாகிய தேவர்கள். அவி - யாகச்சோறு. போர் மகமூடு - போட்டி மனப்பான்மையிற் போர்

போலச் செய்யப்பட்ட தக்கயாகத்தில். மகம் - யாகம். செலவு - சென்று அநுபவித்தலே. தீரமுளார் - வீரபத்திரரான சிவபிரான். சினகரம் - கோயில். முற்றும் - முழுவதும், உற்றும் எனினுமாம். சேவல - காவல் செய்பவனே! பாவலர் - பாவாணர். இசை நாவலர் - சங்கீத வல்லுநர்கள்.

29. திருவுலாக்காட்சிகாண

தோடி] [ஆதி

தான தானதன தான தானதன
தான தானதன தனதான

ஆதி யே! கருணை வாரி யே! எனவும்
ஆடல் பாடல் செயும் அடியார்கள்-
ஆசை யோடுபுகழ் வாச பாதமலர்
ஆண்மை யாளனென முடிமேலே;
ஈதி! ஆறுமுக! வேல வா! குறவி
ஈச னே! அமரர் கிளிகோவே-
ஏழில் ஏழிசைகள் ஓத நீவருமொர்
ஏரு லாவிழிகொள் வதெநாளோ;
காதி லேகுழைய தாஅ ராஅணிவர்
காடு விடெனவும் நடமாடும்-
காளை யேறிபர மேசர் காதிலுப
தேச கானமுரை கனிவாயா;
தீதி லாஅமுதர் வாழு மாறவுணர்
சேனை மாளவிடும் அடல்வேலா-
தேவி வாழ்சௌம லீசர் கோயில்வளர்
சேய னே! தமிழர் பெருமாளே. (3)

(29) வாரி - கடல். வாச - மணமிக்க. என - என்னுடைய. ஈதி - கொடுப்பாயாக. குறவி - குறத்தி; வள்ளி. அமரர்கிளி - தேவசேனை யம்மை. ஏழில் - ஒருவகை வாத்தியம். ஏர் - அழகு. விழிகொள்வது எந்நாளோ - நான் காண்பது என்றைக்கோ என்றபடி. காடு வீடு என - சுடுகாடே தமக்கு இருப்பிடமென்று: "கோயில் சுடுகாடு" - திருவாச - சாழல்-3. உபதேச கானம் - கான உபதேசம் - இசையோடு சொன்ன போதம். கனி - கொவ்வைக்கனி. அமுதர் - தேவர். சேயன் - முருகவேள்; செவ்வாய்க்குரியவன் எனலுமாம். சேய் - செவ்வாய். சேயன் - சிவந்தவன் என்பது பொருள். தமிழர் பெருமாள் - முருகவேள்.

30. துதி

கேதாரகௌளம்] [ஆதி

தன்ன தய்யானன தனதான
தனன தாந்தன தனதான

அன்ன மெல்லா முடை யுடனீயும்-
அஜப தாண்டவர் அருள்சேயே;
இன்ன மெல்லாருமுன் இசைபாடும்-
இனிமை தான்தெரி தருவேனே;
பின்ன மில்லாதொரளிர் அரன்வாமி-
பிரம ராம்பிகை சுகுமாரா;
சென்ன மல்லீசுரர் தளிமேவும்-
சிறுவ! தீந்தவர் பெருமானே. (4)

(30) அஜபதாண்டவர் - 'அஜபா' நடனஞ் செய்பவர்; திருவாரூர்த் தியாகேசர் செய்வது 'அஜபா நடனம்' எனப்படும். இன்னம் - மேலும். தெரிதருவேன் - எனக்குத் தெரியும். பின்னம் இல்லாது - அபின்னமாக; பிரியாது. அரன்வாமி - சிவனது இடப்பாகத்துறைபவள். சு - நல்ல. சுகுமாரா - நல்ல பிள்ளையே. தீம்தவர் - இனிய தவசிகள்.

31. கருணை பெற

தந்யாசி] [திரிபுடை

தனன தானன தனன தானன
தனன தானன தந்ததான

உலகி லேஎது சதம தோ? இவண்
உரைசெய் தாலினும் உண்டதோ தான்-
ஒருவர் போயினும் ஒருவ ராய்வரும்
உதய மாரகம் உண்டவாழ்வே;
கலக மாயையி தனிலை யா! ஒரு
கடையன் நாயினன் நைந்துபோதல் -
ஆதிய தோ! இலை விதிய தோ! புகல்
கருணை கூருவ தெந்தநாளோ;
இலகு வேடர்கள் கொடியின் மீதுறும்
இணையிலாஅரு ளன்பினாலே-
எளிய னுய்மர வுரியொ டேசெலும்
இளைய காளையென் எம்பிரானே;
திலக வாணுதல் பமர மார்குழல்
தெரிவை பார்வதி தந்தவாழ்வே-
சென்ன மல்லீசுரர் சினக ராலய!
சென்னையில் மேவுறு தம்பிரானே. (5)

(31) சதம் - நிலையானது. இனும் உண்டதோதான் - இன்னும். (சதமென்று ஒன்று) உண்டோ? அது, ஓ, தான்: இவை அசைநிலைகள். ஒருவர் போய் இ(ன்)னும் ஒருவராய் வரும் - "இவர் போய் அவராய் அவர்போய் இவராய் இதுவே தொழிலாய்" - திருப். ("எருவாய் கருவாய்"). உதய மாரகம் உண்ட - பிறப்பு இறப்புப் பொருந்திய. மாரகம் - மரணம். மாயை இதனில் ஐயா எனப்பிரிக்க. நைந்துபோதல்-

நொந்து அழிந்து படல். இலை விதியதோ-இல்லை, என் தலையெழுத்தோ. இலகு வேடர்கள் கொடி (வள்ளி): "இலகு சிலைவேடர் கொடி"-திருப். ("திருமகளுலாவு"). மரவுரி - மரப்பட்டையாடையணிந்து வேட்டுவக் கோலத்தில் சென்றதைக் குறிக்கும். இளையகாளை என் - இளம்வாலிபன் எனப்படும். திலக வாள் நுதல் - நெற்றிச்சுட்டியணிந்த அல்லது திலக மிடப்பட்டுள்ள ஒளிபொருந்திய நெற்றியையுடையவள். பமரம் - பிரமரத்தின் திரிபு; வண்டு. தெரிவை - பெண். சினகர ஆலய - கோயிலிலிருப்பவனே ஒருபொருள் இருசொல்).

32. மயில்மிசைக் காட்சிபெற

சாமா] [ஆதி

தத்தத் தனத்ததன தத்தத் தனத்ததன
தத்தத் தனத்ததன தனதான

வட்டிக் களித்ததன மொத்துப் பிறப்புவளர்
மட்டித் தனச்சுழலில் மருளாதே-
மக்கட் குலத்தையுய வைக்கத் தெரித்தபுகழ்
மற்றத் திருப்புகழை எதுநாளும்;
ஒட்டிப் பரப்பவரு மெய்ப்பத்தர் சித்தமதில்
ஒப்பற் றுதித்துநட மிடுவேளே-
ஒக்கற் குறத்தியொடு பக்கற் சுரப்பிடியும்
உற்றுக் களிக்கமயில் மிசைவாராய்;
எட்டித் திருத்தருப ழுத்துற்றும் உற்றபயன்
எற்றைக்கு மற்றெதென எளியேனும்-
இற்றைக் கிருப்பதென எற்றைக்கும் உற்றிடிலென்
இட்டத் திருப்பதெது பயனேதோ;
செட்டித் திருப்பெயர! செட்டிக் குலத்தவர்கள்
சித்தத் தணைத்தசெள மலிசேர்-
சித்ரத் திருத்தளியில் ருத்ரச் செபத்தில்மகிழ்
செச்சைத் திரட்சிபுனை பெருமாளே. (6)

(32) வட்டிக்கு அளித்த தனம் ஒத்து - வட்டிக்கு விடப்பட்ட பணம் போல. பிறப்பு மேலும் மேலும் வளர்வதற்கு 'வட்டிப்பணம்' உவமிக்கப் பட்டது தற்காலத்துக்கொத்த உவமை; அரிய உவமை. மட்டித்தனச் சுழல் - அறியாமைச் சுழல்நீர். உயவைக்க - பிழைக்கச் செய்ய. தெரித்த புகழ் - தெரிவித்த திருப்புகழ். ஒட்டி - கங்கணங் கட்டிக் கொண்டு. ஒட்டுதல் - சூளுரைத்தல்: "ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்"-சம்பந்தர் ("மட்டிட்ட"). பரப்பவரும் மெய்ப் பக்தர் - வள்ளிமலைத் திருப்புகழ்ச் சச்சிதாநந்த சுவாமிகள். ஒக்கல் - இடுப்பு; (மனையாட்டியென்ற) உறவு. பக்கல் - (இடுப்பின் மற்றொரு) பக்கம். சுரப்பிடி - தெய்வயானை. எட்டிக் திருத்தரு - அழகிய எட்டி மரம். பழுத்துற்றும் - பழுத்தும். சிவக்கப்பழுத்த எட்டிமரம் பார்வைக்கு அழகாக இருக்குமாதலின் 'திருத்தரு' என்னப்பட்டதுபோலும். 'புகழ்தற்போலப் பழித்தல்' அணியாகவும் கொள்ளலாம். எற்றைக்கும் -

என்றென்றும். மற்று - அசை. உற்றபயன் எது என - (எட்டி பழுத்தும்) உண்டாகும் பலன் எது என்றபடி. இற்றைக்கு இருப்பதென - இன்றிருப்பது போலவே. எற்றைக்கும் உற்றிடில் - என்றைக்குமே இருந்து விட்டால். பயன் ஏதோ - என்ன பலன் (எனக் கூட்டுக).

உபமானம்		உபமேயம்
எட்டிமரம்	—	நான்
பழுத்திருத்தல்	—	பாடிப் பக்திபண்ணல் (இன்றையநிலை)

ஆனால் எதிர்பார்ப்பது பழுத்தும், எட்டிமரம் போலிராது, சுவை தரும் கனி மரமாக (மா, பலா, வாழை போல) ஆகவேண்டாமா என்பது; அதாவது என் பாடல்கள் பிறர் பலருக்கும் பயன்தர வேண்டாமா, பரவவேண்டாமா என்றபடி போலும். என் இட்டத்து இருப்பது எது - (அதுவுந்தான்) என் இச்சையில் என்ன இருக்கிறது என்றபடி. செட்டி-முருகவேள் திருநாமங்களுளொன்று. செட்டிக் குலத்தவர்கள் - சென்ன மல்லீசர் கோயிலைச்சூழ வாழ்பவர்கள் வாணிப, வைசிய மக்களாதலின் இவ்வாறு கூறலாயிற்று. சித்தத்து அணைத்த - மனத்தில் வைத்து வழி படும். சித்ரத் திருத்தளி - அழகிய, சிறந்த கோயில். ருத்ரச் செபம் - 'ஸ்ரீ ருத்ரம்' ஜெபித்தல்; முருகவேளும் சிவபிரானும் ஒருவரே ஆகலின் யஜுர் வேதத்தில் சிவபிரானைப் பற்றிவரும் 'ஸ்ரீ ருத்ர'த்தைச் செபித்தால் முருகவேளும் மகிழ்வர் என்பது கருத்து; உருத்திர பசுபதி நாயனார் கழுத்தளவு நீரில் நின்றுகொண்டு 'ருத்ரஜெபம்' செய்தனர் எனப் பெரிய புராணம் கூறும். சென்ன மல்லீசர் கோயிலிலும் ருத்ர ஜபம் நடப்பதுண்டு. செச்சைத் திரட்சி - திரட்சிச் செச்சை - நிறைந்த வெட்சிப்பூ மாலைகள்.

(சென்ன மல்லீசர் கோயில் அருட்புகழ் முற்றும்.)

திருவருள் நிகழ்வு

14-9-1962 இல் செக்நாட்டுப் பேரறிஞர் காமில் சுவலபில் அவர்களுக்கு மறைமலையடிகள் நூல்நிலையத்தில் ஒரு சிற்றுண்டி விருந்தும் பாராட்டும் நடந்தது. அப்பொழுது நூல்நிலையத்தை யடுத்துள்ள பிள்ளையார் கோவிலில் அவர்கள் முன்னிலையில் அருட்கவி சேதுராமனவர்கள் பிள்ளையார்மீது அருட்பாடல்கள் பாடினர்.

சென்னை கந்த கோட்டத் திருக்கோவிலின்கண் 18-9-1962 இல் அருட்கவியார் அவர்கள் வழக்கம் போல் பாடினர். இவ்வருள் நிகழ்ச்சியில் பாரத மத்திய அரசின் கனஇன அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும், பாசனத்துறை அமைச்சர் திரு. ஓ. வி. அளகேசன் அவர்களும் கலந்து கொண்டனர். அப்பாடல்கள் அடுத்த செல்வி இதழில் இடம் பெறும்.

நரி விருத்தம்

[திரு. பி. எல். சாமி. பி. எஸ். ஸி.]

திருத்தக்க தேவர் பாடியதாக நரி விருத்தம் என்றொரு கதை வெளிவந்திருக்கிறது. திருத்தக்க தேவர் கூறும் கதையும் தேவாரத்தில் அப்பர் குறிப்பிடும் நரிவிருத்தமும் ஒன்ரு, வெவ்வேரு என்பது இக்கட்டுரையில் ஆராயப்படும். நரிவிருத்தம் என்பதில் வரும் விருத்தம் என்ற சொல்லை விருத்தாந்தம் என்பதாகக் கொண்டு பொருள் கண்டனர் சிலர். விருத்த யாப்பால் ஆனதால் விருத்தம் எனப் பெயர் பெற்றது என்று பலரும் கருதுகின்றனர். நீதிக்கதைகளில் விலங்குகள், பறவைகள் பேசுவது போல் வருவது உண்டு. தொல்காப்பியர் காலத்தில் கூட அத்தகைய கதைகள் இருந்தன என்பதையும் உணர்கிரோம். தொல்காப்பியர் உரையில் நச்சிஞர்க்கினியர் 'சிறு குரீஇ உரை' ஒன்று குறிப்பிடுவது ஒரு குருவிக் கதையை என்றே அறிகிரோம். சைனப்புலவர்கள் 'கிளி விருத்தம்', 'எலி விருத்தம்' என்ற பெயர் கொண்ட நூல்களை இயற்றியிருந்தனர் என்பதை "குண்டலகேசி விருத்தம்", 'கிளி விருத்தம்', 'எலி விருத்தம்', நரிவிருத்தமுதலாவுள்ளவற்றிற்குக் கலித்துறைகளும் உள்ளவாம்" என்று வரும் வீரசோழிய உரையின்வழி உணர்கிரோம். ஆனல் இப்பொழுது வெளிவந்துள்ள திருத்தக்கதேவர் பாடியதாகக் கூறப்படும். நரி விருத்தத்தில் கலித்துறைப் பாடல்கள் இல்லை.

அதனல் திரு. மு. இராகவய்யங்கார் கலித்துறைகளுடைய கிளிவிருத்தம், எலி விருத்தங்களுடன் நரிவிருத்தமும் தவருகச் சேர்க்கப்பட்டதெனக் கருதிஞர். ஆனல் அக்கருத்துக்கு வேறொரு சான்றும் இல்லை. கலித்துறைகளுடன் கூடிய நரி விருத்தம் என்றதொரு வேறு நூல் இருந்திருக்க வேண்டுமென்றே தெரிகின்றது. அந்த நூல்தான் தேவாரத்தில் அப்பர் குறிப்பிடும் நரிவிருத்தமாகும். தேவர் கூறும் நரி விருத்தக் கதையையே அப்பர் குறிப்பிடும் நரிவிருத்தக் கதையெனச் சிலர் கருதினர். நரிவிருத்தம் தேவர் கதை போன்றதோ, பஞ்ச தந்திரத்தில் கரடக தமனர் எனவரும் நரிகளின் கதை போன்றதோ விளங்கவில்லையென்று மீனட்சி சுந்தரஞர் எழுதியிருக்கிரூர். ஆனல் நாவுக்கரசர் குறிப்பிடும் நரி விருத்தக் கதை தேவர் கூறும் கதையுமன்று, பஞ்ச தந்திரத்தில் வரும் கரடகதமனர் என்ற நரிகளின் கதையுமன்று. நாவுக்கரசரே பிறிதொரு பாடலில் ஒரு நரிக்கதையைக் குறிப்பிடுகிரூர். தேவர் பாடிய நரிக் கதை பஞ்சதந்திரத்தில் மித்ரலாபப் பகுதியில் வருகின்ற கதையைத் தழுவி வருகின்றது. வேடன் ஒருவன் மானைக் கொன்று

தூக்கி வரும் வழியில் பன்றியைக் கண்டான், அதை அம்பால் எய்தபோது பன்றி தாக்கவே வேடன் இறந்தான். பன்றியும் இறந்தது. வேடனும், பன்றியும் பாம்பை மிதித்து விடவே பாம்பும் இறந்தது. அங்கே வந்த நரி, வேடன் ஒரு திங்களுக்கும், மானும், பன்றியும் இரண்டு திங்களுக்கும், பாம்பு ஒரு நாளைக்கும் உதவுவர் என்று எண்ணி அன்றைய உணவுக்காக விற்குதையைக் கடிக்கவும் வில்லால் மோதுண்டு இறந்தது.

தேவர் கூறும் கதையில் பன்றியில்லை, யானையுண்டு. அம்பு பட்ட யானை புற்றின் மேல் ஏறியிருந்த வேடனைத் தாக்க யானை முகத்தில் பட்ட அம்பு புற்றில் புகவும், பாம்பு சீறி வேடனைக் கடித்தது. தேவர் கூறும் நரிக்கதை பஞ்சதந்திரக் கதையைவிட அழகாகவும் பொருத்தமாகவும் இருக்கின்றது. நாவுக்கரசர் தேவாரத்தில் குறிப்பிடும் நரிக்கதை புத்த ஜாதகத்தில் வரும் கதை என்பதைப் பலரும் உணரவில்லை. அக் கதை பின் வருமாறு: வாரணாசியில் பிரம்மதத்தன் ஆண்டபோது போதி சத்துவர் சக்கனாக மறுபிறப்பு எய்தினார். அச்சமயம் அவ்வூரில் வாழ்ந்த பார்ப்பன இளைஞன் ஒருவன் தக்கசீலம் சென்று விற் பயிற்சியில் சிறந்த வீரனாகவே, அவனுடைய குரு தன் மகளையே அவனுக்கு மணமுடித்துக் கொடுத்தான். பார்ப்பனன் தன் மனைவியை அழைத்து வாரணாசிக்கு வரும் வழியில் ஐம்பது வழிப் பறி கொள்வோர் அவர்களை வளைத்துக் கொண்டனர். ஆனால் பார்ப்பன இளைஞன் அக்கள்வர்களை அம்பால் கொன்று கள்வர் தலைவனை மற்போரில் வென்று அவன் தலையை வெட்ட வாளைத் தருமாறு தன் மனைவியைக் கேட்டான். ஆனால் அவன் மனைவி கள்வர் தலைவனின்மேல் காமுற்று, வாளால் தன் கணவன் கழுத்தையே வெட்டி விட்டாள். பின்னர்க் கள்வர் தலைவனுடன் கூடி அவள் செல்லும்போது ஓர் ஆறு குறுக்கே வந்தது. ஆற்றை நீந்தியே கடக்கவேண்டும். பார்ப்பனன் மனைவியுடைய ஆடை அணிகளையும், அவளையும் தூக்கி ஆற்றைக் கடப்பது முடியாதாகையால் முதலில் ஆடை அணிகளைத் தூக்கிச் சென்று அடுத்த கரையில் சேர்ப்பித்து மீண்டும் வந்து அவளைக் கொண்டு சேர்ப்பிப்பதாக இருவருக்கும் உடன்பாடு ஆகியது. ஆனால் அந்தக் கள்வர் தலைவனோ அக்கரை அடைந்ததும் கணவனைக் கொன்றவளை நம்பமுடியாதென்று கருதி அவளை விட்டு விட்டுச் சென்று விட்டான். பார்ப்பனன் மனைவியோ கணவனையும், காதலனையும் இழந்து அழுது கொண்டிருக்கும் போது, ஒரு நரி ஆற்றோரமாக ஓடுவதைக் கண்டாள். நரியின் வாயில் ஓர் இறைச்சித் தசை இருந்தது. ஆற்றோரம் ஓடும் போது நரியானது ஒரு மீன் துள்ளி விழுந்ததைப் பார்த்தது.

மீனைக் கண்டதும் நரி தசையைக் கீழே போட்டுவிட்டு மீனைக் கவ்வப் பாய்ந்தது. ஆனால் அந்த மீனோ நரி கவ்வுமுன் ஆற்றில் குதித்து ஓடிவிட்டது. அதற்குள் ஒரு பறவை தசையைத் தூக்கி ஓடிவிட்டது. நரி தசையையும் இழந்தது, மீனையும் இழந்தது. இக் காட்சியைக் கண்ட பார்ப்பனன் மனைவி, நரியின் ஏமாற்றத்தைக் கண்டு தன் குற்றத்தை உணர்ந்தாள். இக்கதையையே நாவுக்கரசர்,

> "நரிவரால் கவ்வச் சென்று நற்றசை இழந்த தொத்த
> தெரிவரான் மால்கொள் சிந்தை தீர்ப்பதோர் சிந்தை செய்வார்"
> ச-உஎ-டு.

என்ற தேவார வரிகளில் பாடினர். இதே கதையினையே விருத்தப் பாக்களால் சைனர் பாடிய நூல் ஒன்று நாவுக்கரசர் காலத்தில் இருந்திருக்க வேண்டும். நாவுக்கரசர் சைனராயிருந் தவர். மற்றும் பௌத்தரோடு வாதிட்டு வென்றவர். ஆதலால் புத்த சாதகக் கதைகள் அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். சைனர் எழுதிய கதைகளையும் அறிந்திருப்பர். அதனால்,

> "எரி பெருக்கவ ரவ்வெரி யீசன
> துருவ ருக்கம தாவ துணர்கிலார்
> அரிய யற்கரியானை யயர்த்துப்போய்
> நரிவிருத்தம தாகுவர் நாடரே".

என்று நாவுக்கரசர் தேவாரப் பாடலில் குறிப்பிடும் நரிவிருத்தக் கதை மேற்கூறிய புத்தசாதகக் கதையென்றே தெரிகின்றது. சிவனை அயர்த்துப் பிற தெய்வங்களை நாடுபவர் நரி விருத்தத்தில் வரும் நரியின் கதியையே அடைவர் என்பதே நாவுக்கரசர் கருத் தாகும். அஃதாவது "அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டவர்" கதியாவர். நரி தசையை இழந்த கதை, இவ்வுண்மையை விளக் குமாறு போல் தேவர் கூறிய நரிக்கதை இவ்வுண்மையை விளக் காதாகலின் நாவுக்கரசர் குறிப்பிடும் நரிவிருத்தக் கதை புத்த சாதகக் கதையே என்பது விளங்கும். இக்கதையையே சைனர் ஒருவர் விருத்தப்பாவால் பாடியிருக்க வேண்டும்.

> "கூட்டினார் கிளியின் விருத்த முரைத்ததோ ரெலியின் றொழிற்
> பாட்டு மெய் சொலிப் பக்கமே செலு மெக்கர் தங்களை"

என்று வரும் பாடலிலிருந்து கிளியின் கதையையும், எலியின் கதையையும் விருத்தப்பாக்களால் சைனர் பாடினர் என்பது தெரிகின்றது. ஆதலால் நரியின் கதையையும் விருத்தப் பாக்க ளால் சைனர் பாடியிருப்பர் என்பதில் ஐயமில்லை. அந்த நரி விருத்தமும், நாவுக்கரசர் குறிப்பிடும் 'நரி வரால்கவ்வச் சென்று நற்றசை யிழந்த' கதையையே தெளிவாகின்றது.

விளியும் எழுவாயும்

[திரு. தி. முருகரத்தனம், பி. ஏ. (ஆனர்சு)]

தமிழில் எழுவாய் வேற்றுமை வடிவம் வேறு; விளி வேற்றுமை வடிவம் வேறு. இப்படிச் சொல்லுவதும் பெரும் பான்மை பற்றி. அண்மை விளிச் சொற்கள் சில எழுவாய் வேற்றுமைச் சொற்களாக வரத்தக்கன. மற்றவை அவ்வாறு அல்ல.

அரசர்: இச்சொல் எழுவாய் வேற்றுமைக்கு மட்டுமே உரிய வடிவம்.

தமிழ் அரசர் கொடைப் பண்பினர்.

அரசே: இச்சொல் விளி வேற்றுமைக்கு மட்டுமே உரிய வடிவம்-அரசே! மக்கள் தாம் மன்னுயிர்.

தம்பி: இச்சொல் எழுவாயாகவும் அண்மை விளியாகவும் வரத் தக்கது.

தம்பி துணை நிற்பான்.

தம்பி! நீயிருக்க நான் படைக்கஞ்சேன்.

நண்ப: இது அண்மை விளியாக இருந்தும் எழுவாய் வடிவ மன்று.

நண்ப! நாடு வாழப் பாடுபடுவோம்.

ஆகவே முடிவு: எழுவாய் வடிவம் வேறு: விளி வடிவம் வேறு. விளியாதலுக்கு எழுவாய் வடிவம் திரியாதிருக்கின்ற சொற்கள் மட்டுமே எழுவாய்க்கும் விளிக்கும் பொதுவாக வழங்கு கின்றன. "தம்பி" அத்தகைய சொல்.

கீழ்வரும் தொடர்கள் கருதத் தக்கன.

'அக்கா! அம்மா!' என்று தங்கை கூவினாள்; அக்காவும் அம்மாவும் ஓடோடி வந்தனர்.

'அப்பா! தாத்தா!' என்றழைத்துப் பிள்ளை அப்பாவுக்கும், தாத்தாவுக்கும், ஒவ்வொரு பழம் தந்தான்.

இத் தொடர்களில் அக்கா, அம்மா, அப்பா, தாத்தா என்ற சொற்களின் ஆட்சியே கருதத் தக்கன. இச்சொற்கள் எழுவாய் வேற்றுமை வடிவங்களா? விளி வேற்றுமை வடிவங்களா? இரண்டு வேற்றுமைகளிலும் இவை ஆளப்பட்டிருக்கின்றன. விளி வேற்றுமையில் இவை சேய்மைக் குரியன.

இன்றைய தமிழில் இவை எழுவாய்க்கும் விளிக்கும் பொதுவாக வழங்கப்படுகின்றன. ஆனால், உண்மையில் இவை விளிவேற்றுமை வடிவங்கள். இவற்றின் எழுவாய் வடிவங்கள் வழக்கில் அருகிவிட்டன. ஆனாலும் எழுவாய் வடிவங்கள் இல்லாது மொழி நடைபெற முடியுமா? முடியவில்லை. ஆகவே மக்கள் எழுவாய் வடிவங்களை இவ்விளி வடிவங்களிலிருந்து அமைக்க முயலுகின்றனர். இம் முயற்சியில் பிறந்தவை தாம் கீழுள்ளவை :

அக்காள்	அப்பார்
	அப்பன்
அம்மாள்	தாத்தார்

இச்சொற்கள் தமிழ் மரபறிந்த காதுக்குப் 'புதுமை'யாகப் படுகின்றன. இவை தமிழ்மரபையொட்டிப் பிறந்தவையாகத் தோன்றவில்லை. காரணம், விளி வேற்றுமை வடிவங்களின் 'மீது' பாலறி கிளவிகள் சேர்த்து இந்தச் சொற்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. இது முறை அன்று. பாலறிகிளவிகள் சேர்ந்தமைந்த இயல்பான சொற்களே விளியேற்று மேற்கண்ட வடிவங்களாக வழங்குகின்றன. இவ்விளி வேற்றுமைச் சொற்களுக்கு முதலான இயல்புச் சொற்களின் வடிவங்கள் எவை ?

தங்கை, தமக்கை, நங்கை, எங்கை, மங்கை என்ற சொற்களை வைத்து ஒப்பு நோக்க 'அக்கா' என்பதன் முதல் வடிவம் அக்கை என்பதாக இருக்கவேண்டும். 'அம்மா' என்பதன் எழுவாய் வடிவம் அம்மை என்பதாகும். இங்கெல்லாம் உள்ள 'ஐ' பெண்பால் விகுதி போலும். 'தாதா' என்ற சொல்லின் வரலாறும் சுவையானது. தந்தை → தாதை. தாதை என்ற இயல்புச் சொல்லின் விளிவடிவமே தாதா. தாதா → தாத்தா.

'அப்பா' என்ற விளியின் இயல்பு வடிவம் என்னவென்று தெளிவாகவில்லை. அப்பன் என்றும் தகப்பன் என்றும் வழங்கும் சொற்கள் கருதத் தக்கன. தகப்பன், தமப்பன் என்ற சொல்லின் திரிந்த வடிவமே அப்பன் என்ற சொல்லின் பாலறி கிளவி—அன் போக எஞ்சிய பகுதியான அப்ப்—என்பதன் பொருள் என்னவென்று தெளிவுபடவில்லை. அப்பு, அப்புனு, அப்புக்குட்டி என்ற சொற்களின் பகுதி அப்ப்—தான். இவ்வாறே அண்ணா என்ற சொல் எழுவாயாகவும் விளியாகவும் வழங்குகிறது. அண்ணார் என்ற மரபொவ்வாத வடிவமும் உண்டு. அண்ணன் என்பது சரியானதோ? விளங்கவில்லை.

ஐயன் என்ற சொல் விளியில் ஐயா என்றாகி எழுவாயாகவும் வாழுகிறது. ஆய் என்ற சொல் ஆயா என விளியாகி எழுவாயாகிறது; ஆங்கில மொழியுள்ளும் சென்று வாழ்கிறது.

இந்தச் சொற்களின் வரலாறு சில மொழியியல் உண்மைகளை விளக்குகின்றது.

(1) இச்சொற்கள் எல்லாம் மக்களைச் சுட்டும் பெயர்கள். விளிக்கப்படுவோர் மக்களாகத்தான் இருத்தல் வேண்டும் என்பதே இதற்குக் காரணம்.

(2) இச்சொற்கள் மூத்தோரைச் சுட்டும் பெயர்கள். மூத்தோர் மதிப்புக்குரியவர்கள். அவர்களை ஒருமை விகுதிகள் தந்து அழைத்தல் முடியாது. பன்மை விகுதிகள் கொடுக்கவும் நாம் தயங்குகின்றோம். அவர்கள் விகுதிகளுக்கு மேற்பட்டவர்கள்! ஆகவேதான் அம்மா, அப்பா, அக்கா, அண்ணு, தாத்தா, ஐயா, மாமா, என்று விகுதிகள் கொடுக்காது—விகுதிகள் இருந்தும்—அவர்களுக்குரிய எழுவாயாகவும் இவ்விளிச் சொற்களை வழங்குகிறோம். இப்படிப்பட்ட 'வழு' அமைக்கப் படுகிறது. இன்றைய தமிழ் ஏற்றுக்கொள்கிறது.

விளி வடிவங்கள் பல மக்களுக்குப் பெயராகின்றன.

சொக்கப்பா ;	பிச்சையா,
அண்ணுத்துரை ;	அப்பாத்துரை,
அய்யாத்துரை ;	கோவிந்தம்மா,

என்ற பெயர்கள் இதற்குச் சான்றுகள். சின்னுன் என்ற பெயர் விளிப் பண்பும், எழுவாய்ப் பண்பும் மரபுகெட்டுச் சேர்ந்த குழப்பத்தைக் காட்டுகிறது ; அய்யாவு, அப்பாவு என்ற பெயர்கள் விளி வடிவங்களிலிருந்து எழுவாய் வடிவங்களமைக்கும் வேறொரு தவறான முயற்சியையே விளக்கி நிற்கின்றன. பொன்னியாற்றுக்குக் காவிரி என்பது தொல் பழஞ்சொல். இளங்கோவடிகள் கானல் வரியில் 'வாழி காவேரி' எனப் பொன்னியை விளித்து வாழ்த்தினர். இவ் விளிவடிவமே இன்று சரியான எழுவாய்க்குரிய இயல்பாக வழங்குகிறது. விளியை எழுவாயாக எண்ணிய தவறு காரணம் போலும்.

பதுமை, உமை, விசயை, சுசீலை முதலிய சொற்கள் பழைய இலக்கியத்தில் வாழும் எழுவாய்க்குரிய சொற்கள். இவை இன்று பத்மா, உமா, விசயா, சுசீலா என்று விளிவடிவங்கள் பூண்டு இருவேற்றுமையிலும் வழங்குகின்றன. இந்த நிலைமாற்றத்துக்கு விளியை எழுவாயாக வழங்கும் மனப்பான்மை எந்த அளவு காரணம்? வடமொழியில் ஆகாரம் பெண்பால் விகுதியாக வழங்குவதும் இந்த நிலைமாற்றத்துக்குக் காரணமாகலாம். இது ஆராய்ச்சிக்குரியது. விளி எழுவாயாகும் கதை மொழியின் வாழ்வை விளக்குகிறது.

மராட்டிய ஆளுநர்

மேன்மைதங்கிய டாக்டர் ப. சுப்பராயன்

(11-9-1889 — 6-10-1962)

டாக்டர் சுப்பராயன் அவர்களின் மறைவு

தமிழ் நாட்டு நல்லறிஞர், மராட்டிய மாநில ஆளுநர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் அக்டோபர் 6 ஆம் நாள் சனிக்கிழமை யன்று காலை 9 மணிக்கு இம்மண்ணுலக வாழ்வை நீத்தகன்றது நம் நாட்டிற்கு ஈடுசெய்யமுடியாத பெரியதோர் இழப்பாகும். பல்லாண்டுக் காலமாகக் காங்கிரசு கட்சியின் அரசியற் பெருந் தலைவராகவும், ஆட்சியில் பழுத்த அனுபவ முடையவராகவும் விளங்கிய அவர்களுக்கு அகவை எழுபத்து மூன்றுதான்.

டாக்டர் சுப்பராயன் அவர்கள் தம் வாணாள் முழுதினையும் இந்திய நாட்டு நல்வாழ்வுக்காகவே ஒப்படைத்திருந்தார். செல்வப் பெருங்குடியிற் பிறந்தாராயினும் ஏழைகள்பால் அளவற்ற இரக்க முடையவர். எவரையும் எஞ்ஞான்றும் சினந்தறியாதவர். பகைவரும் பாராட்டும் பண்பினர். தமிழ்ப்பற்று மிக்குடையவர். தமிழர்கள் நலனிலும் தனி ஆர்வம் கொண்டவர். நாட்டு ஒற்றுமையில் தனி நாட்டம் கொண்டிருந்தார். காட்சிக் கெளிமையும் இன்முகம் படைத்தவர். நம் நாட்டின் பல மாநிலங் களிலுள்ளாரும் அன்பு பாராட்டும் பண்பு பெற்றிருந்தவர்.

புகழொடு தோன்றிய டாக்டர் சுப்பராயன் அவர்கள் 1889 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் நாள் திருச்செங்கோட்டில் பிறந்தார். திருச்செங்கோட்டுக் கருகிலுள்ள குமாரமங்கலத்தில் தனிப்பெரும் நிலக்கிழாராகத் திகழ்ந்தார். சென்னை நியூலிங்டன் பள்ளியிலும், சென்னைக் கிறித்துவக் கல்லூரியிலும் கல்வி பயின்றார். பின்பு உயர் கல்விக்காக இங்கிலாந்து சென்று ஆக்சுபோர்டு வாட்காம் கல்லூரியிலும், டப்ளின் டிரினிட்டிக் கல்லூரியிலும் பயின்று, பார்-அட்-லா என்ற உயர்தரப் பட்டத் தைப் பெற்றார். அவரோடு ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் உயர்திரு. பி. டி. இராசன் அவர்களும் உடன் பயின்றார். படிப்பை முடித்துக் கொண்டு தமிழ் நாடு திரும்பிய பின் மங்களூரைச் சார்ந்த ராதாபாய் என்னும் அம்மையாரைக் கலப்புத் திருமணம் செய்து கொண்டார்.

டாக்டர் அவர்கள் நூல்கள் படிப்பதில் மிக்க ஆர்வம் உடை யவர். ஏராளமான தமிழ் ஆங்கில நூல்களும் விளையாட்டுக்களைப் பற்றிய நூல்களும் அடங்கிய பெரிய நூல் நிலையம் அவர்களிடம் உண்டு.

இளமைக் காலத்திலேயே டாக்டர் சுப்பராயன் அவர்கள் அரசியலில் ஈடுபட்டார். 1920 ஆம் ஆண்டில் அனைத்திந்தியக் காங்கிரசுக் குழுவில் ஓர் உறுப்பினராக அமர்ந்தார். அக் காலத்தில் தென்னிந்திய நிலக்கிழார்களின் சார்பாகச் சென்னை

மேல் சபைக்கு ஓர் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்னை அரசாங்கத்தின் முதலமைச்சராக 1926 முதல் 1930 வரை ஆட்சி நடத்தினார். 1937-39 இல் இராசாசி அமைச்சரவையில் சட்ட அமைச்சராகவும், பின்னர்ச் சில காலத்தில் ஓமந்தூரார் காலத்தில் உள்துறை அமைச்சராகவும் பணியாற்றினார். 1949 இல் இந்தோனேசியாவுக்கு அரசியல் தூதுவராகச் சென்றார்.

டாக்டர் சுப்பராயன் அவர்கள் அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினராகவும் இருந்தார். 1954-57 இல் இராச்சிய சபையில் உறுப்பினராகப் பணியாற்றினார். பின்பு மக்கள் சபையிலும் உறுப்பினரானார். 1959 இலிருந்து பொதுக் கணக்குக் குழுவின் தலைவராக இருந்து வந்தார். ஆனால் அந்த ஆண்டின் செப்டம்பர்த் திங்களில் மைய அரசின் போக்குவரத்துச் செய்தித்துறை அமைச்சரானார். 1962 இல் மராட்டிய மாநில ஆளுநராக அமரும் வரை அவர் அமைச்சராகப் பணியாற்றி வந்தார்.

சுப்பராயன் அவர்கள் கிரிக்கெட்டு விளையாட்டில் பேரார்வம் கொண்டவர். அவ்விளையாட்டை ஆடுவதில் பேரின்பங் கண்ட அவர் மேனாட்டிலிருந்து வல்லுநரை அழைத்துத் தம் மக்களுக்கும் அவ் விளையாட்டைக் கற்பித்தார். இந்தியக் கிரிக்கெட்டு குழு ஏற்பட முதற்காரணராகவும் இருந்தார்.

சுப்பராயன் அவர்களின் குடும்பம் வியப்பானது. அவருடைய ஆண்மக்களும் மகளும் வெவ்வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள். ஆனால் கட்சி வேறுபாட்டால் குடும்ப அன்பு குறைந்து போனதில்லை. குடும்பத்தில் அமைதியும் அன்புமே நிலவின. ஆனால் சட்டத்தின் முன்பு தம்மகனுக்கும் சலுகை காட்டவில்லை. சென்னையில் அமைச்சராயிருக்கும்போது தலைமறைவாயிருந்த தம் மகன் மோகன் குமாரமங்கலம் அவர்களைக் கைது செய்ய எல்லா முயற்சிகளும் செய்யப்பட வேண்டும் என்று வலிய ஆணையிட்டுக் கைது செய்தார்.

சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் டாக்டர் சுப்பராயன் தமிழ்க்கடல் மறைத்திரு. மறைமலையடிகளின் மாணவராகப் பயின்றார். அதனால் அடிகள்பால் அவர்க்கு என்ஞான்றும் பற்று இருந்து வந்தது. அடிகளால் செந்தமிழ்ப் பற்று ஊட்டப் பெற்ற அவர் உயர்ந்த செந்தமிழ் நூல்களைப் பிழையின்றி வெளியிடும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் நூல்களை விரும்பிப் படித்தார். கழகத்தின் நூல் கட்டடத்தைப் பாராட்டினார். தமிழ் வளர்க்கும் கழக ஆட்சியாளரின்பால் தனிப் பற்றுக் கொண்டிருந்தார்.

இராசாசி அமைச்சரவையில் அமைச்சராயிருந்த காலத்தில் தமிழ் நாட்டில் இந்தியைக் கட்டாயப் பாடமாகப் புகுத்திய டாக்டர் சுப்பராயன் அவர்கள் மூன்ருண்டுகளுக்கு முன்பு மொழிக் குழுவின் உறுப்பினராயிருந்த போது இந்தித் திணிப்பை வன்மையாக எதிர்த்தார். கழக ஆட்சியாளரும் அது போது அவரிடம் அவர்தம் ஆசிரியராகிய மறைமலையடிகளின் 'இந்தி பொது மொழியா?' என்ற நூலை அனுப்பி இந்தி ஒருகாலும் பொது மொழியாகக் கூடாது என்று தெரிவித்தார்.

டாக்டர் சுப்பராயனுக்கும் கழகத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு நீண்ட காலமாகவே இருந்து வந்திருக்கிறது. இப்பொழுது கழகம் இயங்கும் சென்னை பிராட்வேயிலுள்ள கட்டிடத்தை குடிக் கூலிக்குப் பெற உறுதுணை புரிந்தார். மேலும் வேண்டிய காலத்தில் தக்கவாறு கழகத்திற்கு உதவிகள் புரிந்து கொண்டே வந்திருக்கிருர். மறைமலையடிகள் நூல் நிலையத்திற்கு வருகை புரிந்து நூலகத்தைப் பற்றித் தம் கருத்துரையை எழுதியிருக்கிருர். 1939 இல் கழக ஆட்சியாளரால் எழுதி வெளியிடப் பெற்ற 'தானே தமிழ் கற்கும் முறை' என்ற நூலுக்கு அரியதோர் அணிந்துரை வழங்கினுர்.

கழகம் இவ்வாண்டில் வெளியிட்ட பத்துப்பாட்டு ஆங்கில மொழி பெயர்ப்பு நூலுக்கு அரியதோர் அணிந்துரை வழங்கினுர். 1961 ஆகஸ்டுத் திங்களில் கழகத்தின் 1008 ஆவது நூல் வெளியீயிட்டு விழா நடைபெற்றது. அவ் வெளியீட்டு விழா மலருக்கு வாழ்த்துரை வழங்கினுர்.

அருட்கவி சேதுராமன் பாடல்களைக் கேட்டின்புறவேண்டுமென்றும், சென்னைக்கு வரும்போது ஏற்பாடு செய்யலாம் என்றும் கழக ஆட்சியாளரிடம் கூறியிருந்தார். இந்த முறை பம்பாயிலிருந்து புறப்படும்போது, சென்னை சேர்ந்ததும் அருட்பாடல் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யும்படி கழக ஆட்சியாளரிடஞ் சொல்லலாம் என்று தம் நேர் உதவியாளரிடந் தெரிவித்தார்களாம். ஆனுல் வழியிலேயே உடல் நலம் சீர்கேடுற்றமையால் அருட்கவியாரின் பாடல்களை நேரில் கேட்கும் வாய்ப்பு அவர்க்குக் கிட்டாது போயிற்று. மேலும் நாடாப். பதிவு செய்யப்பட்ட பாடல்களையேனும் கேட்கச் செய்வதற்குக் கழக ஆட்சியாளர் முயன்றும், முடியாது போயிற்று. அவ்வருங்குணச் செம்மலை, வள்ளுவர், பாரதியாரின் அஞ்சல் தலைகளை வெளியிட்டுத் தமிழ்ப் பெருங் கவிஞர்களை நாட்டிற்கறிமுகப்படுத்தியவரை, நல்லோரை இழந்ததற்காகக் கழகம் உறுதுயர் உறுகின்றது. தந்தையின் பிரிவால் வருந்தும் மக்களுக்குக் கழகம் தன் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

இறை உணர்வு

[வித்துவான் மாவை. துரை. பழநி மகாதேவன், ஆம்பூர்]

புறத்தோற்றங்களையும் சடங்குகளையும் ஒருவர் உடைமையினாலேயே சமய உணர்வு அவருக்குத் தோன்றியது என்னலாகாது. இறைவனைத் தம்மகத்துட் கொள்ளா, அன்றிக் கொள்ள வியலா அறியாமையிலாழ்ந்த மக்களுக்கென வகுக்கப் பெற்றவை இவை. இந்நினைவூட்டு சாதனங்கள் வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு வகையின. இத்தகு ஒரு சமயச் சார்புடைய புறத்தோற்றங்களும் சடங்குகளும் பிறமதப் புறத்தோற்றங்களிலும் சடங்குகளிலும் ஏற்றமெனல் பேதமை. அவைகளை விடுதரா. இறையோடொன்றுவிக்கின்ற சமயமே சமயம். இறை எண்ணத்தையும் இறைக்குரிய நம் கடப்பாட்டையும் அறிவதே அவனோடொன்றுதற்குரிய நெறியாம். அத்தகு நெறியிற்றும் சமயமே ஏற்றமுடைச் சமயம் என்னலாம். ஆக, சமய பேய்பாடு இறைபற்றிய கோட்பாட்டினாம்.

துருயித்திச, சைவ சமயங்களில் இறைபற்றிய எண்ணம் ஏறத்தாழ ஒரே தன்மையினை உடையதென முன்னரே கூறினோம். அர் என் தின் ஏத் எனற்பாலது என்றும் நிலைத்த பழம்பொருள் என்று பொருள்படுவது என விளக்கிக் கூறினாம். *அத்தகைய இறைவனிலக்கணம் சிவஞான போதத் தின்கண் சத்து எனக் கூறப்படுகிறது.

விவிலிய மறை பழைய ஏற்பாட்டில் 1 அரசர்கள் அதிகாரம் 7ல் 21, 22 வாக்கியங்களில் சாலமன் அமைத்த கோயில் பற்றிய செய்தியொன்று கூறப்படுகிறது. இரு பக்கங்களிலும் இருந்த இரு தூண்களாம் ஃசாகின், ஃபோசு என்பன மீது அல்லி போன்ற மலர்கள் அமைத்திருந்தனர் என அறிகின்றோம். உயர் பொருள் நோக்கில் அவையிரண்டும் அன்பென்னும் ஆண் தத்துவமாகவும், அறிவென்னும் பெண் தத்துவமாகவும் கூறப்படுகின்றன. அக்கோயில் மேல்வளைவு அன்பு ஞானங்களிடையே நிலைத்த தகுதி அமை (பொருந்திய நிலை) வினைக் குறிக்கும்.

மற்றும் சைவ சித்தாந்தத்தில் வழிபடப் பெறும் சிவலிங்கம் கரும சாதாக்கியம் எனப்படும். சிவலிங்க வடிவின் அடித்தளம் பிந்து எனவும், லிங்கம் நாதம் எனவும் கூறுப. நாதமும் பிந்தும் கலப்பதில் கருமரூபம் உண்டாகிறது. உலகமே நாதபிந்துக்களின் கூட்டுறவுதான். பிந்துவைச் சக்தி எனவும், நாதத்தைச்

---

*சிலம்பு 35 பரல் 8. பக் 33 காண்க. †சத்தியும்

சிவனெனவும் கூறுகிறோம். வையகமே சிவசக்தி மயமாம் † என்குவர் சான்றோர். ஆக, நாதமும் பிந்துவும் இயங்குதிணை, நிலைத்திணை யுயிர்களுக்கு ஆதாரமா யமைகுவன. முன்னர்க் காட்டிய விவிலிய நூற் சாலமன் கோயிலில் இரு தூண்க ளமைந்த தத்துவமும் இக்கருத்தும் ஒன்றேயாகும் என்பதறிஞர் கருத்து.

நம் ஆகமங்கள் பிரணவத்தின் அடிப்படை நிலைகள் நாதமும் பிந்துவும் என நவிலா நிற்கும். பிந்து வட்ட வடிவின தென்றும், நாதம் நீண்ட வடிவினதென்றும் ◡ என்ற உருவமும்—கோட்டுருவமும் ◡—இவ்வடிவத்தையேனும் உ எனும் இவ்வடிவத்தையேனும் பெறுகின்றன வென்றும், அவ்விந்து நாதக் கலப்பேமௌன அக்கரம்* எனவும் ஆராய்ந்தறிந்துள்ளனர். தூநுபித்துகள் உபயோகித்த அகன்ற ↑ இத்தகு அம்புக் குறியும் இப்பொருளினதே என்றும் முடிவு கூறுவர்.

சிறப்பிசைவு (Remarkable Coincidence)

"நித்திம் ஒண்ட்டுதவ்; நித்துதவ் ஒண்டிம்" (Nid Dim Ond Duw, Nid Duw Ond Dim) என்பவை தூநுபித்திசக் குருக்கண்மார் தம் நூல்களில் கூறிய மறைத்தொடர்கள் எனவும், அவை, இறைதானே நிலைபெறும் உயர்பொருளென்றும், அது வேறெப்பொருளின் கூறுனதல்ல வென்றும், அன்றி அஃதே கூறுகாதென்றும் பொருள்தரும் தொடர்களாமெனச் சர்ஜான்தானியல் கருதுகின்றார். அத்தகைய இறையியல்பு பற்றிய செழுங்கருத்து நம் திருவாசக மறையிலும் காணக் கிடைக்கின்றது.

"இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்தேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே?"

இறையியல்பு :—இறைவனை ஒருவரும் கண்டிலர்; அவன் ஆவி வடிவினன் என விவிலியம் கூறுகின்றது. கிறித்துவ மறை ஆய்வாளராம் சான்றோர்க்கு இவ்விறை விளக்கம் போதாதாயிற்று. அறிஞர் சாம்யூல் கிளார்க் என்பார் இறைவனைத் தானே நிலைத்து நிற்கும் தனிப்பொருள் என்றும், அஃதன்றி வேறில்லா நிலைப்பொருள் என்றும், எண்ணம் ஆழ்ந்து ஆழ்ந்து சிந்தித்தும் நினைவுங் கெட்டாப் பொருளாகும் எனவும் விளக்கினர்.

*இதைப் பிள்ளையார் சுழி என வழங்குகின்றோம்.

வேருேரிடத்தில் விவிலியம் "மனிதன் இறையுருவிலும் இறைபோன்றும் படைக்கப்பட்டான்" என்று கூறும். இறையியல்பாம் பேரருளுடைமை, பேரறிவுடைமை, பேராற்றலுடைமை என்னும் முக் கூறுகளும் மனிதன்பால் சாயல்களாய் அமைந்துள்ளன. அவை அன்பறிவாற்றல்களுக்கு அடிகோலிகளாயமைந்துள்ளன. மனித இறைத்தொடர்பினை இங்ஙனம் ஆயுங்கால் இறைத்தன்மையினை ஒருவாறு காணமுடிகிறது.

"கண்ணுற் காண வியலா அவன் செய்கைகள்—உலகப் படைப்பிலிருந்து என்றும் நிலைத்த அவன் பேராற்றல், இயல்களைத் தெளிவாக்குகின்றன" என உரோமர் 1ஆம் அதிகாரம் 20ஆம் வாக்கியத்தில் சென்ற் பால் முனிவர் கூறுகின்ருர். ஆகையின் இறைவன் அருள், ஆற்றல் ஆகியவை, உயிர்க்கூற்றினை வளர்க்க, உயிர்ச்சத்தினைத் தோற்றுவிக்க, உயிர் ஆற்றலை விளைவிக்க இயற்கை வடிவங்கொண்டனன் போலும். நன்கு வளர்வுற்ற தாவரத்தில் முதற்கண் மகரந்தம், பின் விதை, பின் முழுச்செடி ஆதல்போல முழுதும் வளர்வுற்ற ஏனைய உயிர்களிலும் முதற்கண் கருத்தரித்தல், கருப்பையில் வளர்ச்சி, பின்பிறப்பு என்பன தோன்றக் காணலாம். ஆகையால் உயிர் வளர்ச்சிக்கு முத்திறப் பொருள்கள் இன்றியமையாதனவாம்.

இறைவன் அருளும், இறைவன் ஞானமும் படைப்புக்கு உறுதுணையாவன. குறியீட்டுச் சாத்திர அடிப்படையில் தோன்றிய சமயங்கள் யாவும் இறைவன் பேரருளுடைமையிலும் அவன் முற்றறிவிலும் உறுதிகொண்டு அமைக்கப்பெற்றனவாம். இறைவன் பேராற்றல், அவன் அருளுடைய முற்றறிவுடைமைகளின் இணைப்பினுல் செயற்படுகின்றது. சுவீடன்பர்க்கு முனிவர் இயற்றிய "இறையருளும் இறைஞானமும்"[2] என்ற நூலில் இக்கருத்துக்கள் மிக விரிவாகப் பேசப்படுகின்றன.

இச்சா சக்தி முழு அறிவையும், ஞான சக்தி மேலும் இயலும் வழிகளையும், கிரியா சக்தி இச்சாசக்தியினுடையவும் ஞானசக்தியுடையவும் கூறுகளைப் பெற்றுச் செயலாற்றுகின்றது என்ற துரூயிதக்குருக்கள் கொள்கை நம் சைவசித்தாந்தக் கொள்கையினேடொப்பிட் டெண்ணத்தக்க தாகும்.

இத்தகு இறையியல்புக் கருத்துக்களை ஆராயப்புகுங்கால் பழங்கோயிற் சமயங்களிலேயே இவை நிரம்பியுள்ளன எனப் புலனுகின்றது. ஆகவே துரூயியத்திச, சைவ சமயங்கள் ஆகிய இரண்டும் ஏறத்தாழ ஒரே தன்மைத்தான இயல்பினையுடையன.

---

1. Romans: Chapter 1. 20.
2. Divine Love & Divine Wisdom.

தோடி மணவணியா?

[திரு. வை. தட்சிணாமூர்த்தி, எம்.ஏ.,]

(செல்வி சிலம்பு ௩௭, பரல் ௧, ௬௫ ஆம் பக்கத் தொடர்ச்சி)

சோழன் செருப்பாழியெறிந்த இளஞ்சேட் சென்னியை ஊன் பொதி பசுங்குடையார் பாடும்போதும்,

"எமக்கென வகுத்த வல்ல மிகப்பல
மேம்படு சிறப்பின் அருங்கல வெறுக்கை" (புறம்: ௩௭௮)

எனப் பாடுகின்றார்.

மூன்று புலவரும், அருங்கலமாய பெறுதற்கரிய அணியை அல்லது மதிப்புயர்ந்த அணியை மன்னன் தமக் கீந்ததாகக் கூறுகின்றனர். எனவே அருங்கலம் என்பது மதிப்பால் சிறப்புடையது என்பது பெறப்படுகின்றது. ஒரே சொல்லுக்குப் பல பொருள் அமைவதுண்டு எனினும் இடம் நோக்கிப் பொருள் கொள்ளுதலே ஆராய்ச்சியாளர் கடமை. அருங்கலம் என்ற அதே சொல்லுக்கு 'அழகு செய்வது' என்ற பொருளுண்மையை,

"பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை"

என்ற அப்பரது வாக்கு தெளிவுறுத்தும். அறிஞர் டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் அருங்கலம் என்ற சொல்லுக்கு "அழகு செய்யும்" என்ற பொருளைக்கொண்டு,

"மெல்லியல் மகளிரும் இழைகளைந் தனரே" (புறம்: ௨௨௪)

என்ற புறப்பாட்டு வரியில் 'இழை' என்பதற்கு அருங்கலவணி முதலவாகிய அணி என்ற உரைக் கூற்றில் வரும் அருங்கலம் என்பது பிறர்க்கு ஈய முடியாத அருங்கலம் என்று பொருள் கொள்கின்றனர்.

"பல கலன்களை அணிந்த தலைவி ஒருத்திக்குக் கணவன் திருமணக் காலத்தில் திருமணத்தின் அடையாளமாக வழங்கும் விலையுயர்ந்த நகையே 'அருங்கலம்' எனலாம். அதுவே அவளை வாழ்வரசியாக வைத்திருக்கும் அருங்கலமாகும். அதனை எத்தகைய துன்ப நிலையிலும் அவள் கழற்றுதல் செய்யாள். அது பிறருக்கு ஈய முடியாத அருங்கலம். அதனாற்றான் அது "ஈகையரிய இழை" எனப்பட்டது. கணவன் வாழும்வரை அவள் உடம்பிலேயே இருந்து, கணவன் இறந்த பிறகு கழற்றப்படுவது அப் பேரணி. அதனாற்றான் கரிகாலனை இழந்த மனைவியர் "இழை

களைந்தனர்" எனப்பட்டனர். கண்ணகி கழற்றிய தொடியையும், கரிகாலன் மனைவியர் கழற்றிய இழையையும், ஆய்வேள் மனைவியர் அணிந்திருந்த ஈகையரியவாகிய இழைகளையும் 'அருங்கலம்' என்னும் பொதுப் பெயரால் குறிக்கலாம் என அவர்கள் தம் தமிழர் திருமணத்தில் தாலி என்னும் நூலில் கூறியுள்ளார்கள். இனி அவர்கள் கருத்தை ஆராய்வோம்:

ஏணிச்சேரி முடமோசியார் ஆய் ஈகைத் தன்மையால், ஈந்து பொருள் அனைத்தையும் இழந்துவிட வறிதே கிடந்த கட்டுத் தறியும், யானைகளை இழந்தவறுய மயில்கள் நடம்பயிலும் இடமாக ஆயிற்று. அவனது உரிமை மகளிரும் பிறருக்கு ஈய இயலாத இழையை மட்டும் உடையவராக இருந்தனர். அவனது கோயில் இவ்வாறிருப்பினும் பிறர்க்கியாது உண்டு பெரும் புகழ் கொண்டிருக்கும் முரசையும் செல்வத்தையும் உடைய அரசர் கோயிலைவிட உயர்ந்தது எனப் புறம் 126இல் பாடுகின்றார்.

ஆய் யானைகளை மட்டும் கொடுக்கவில்லை. தன்னிட மிருந்த விலை மதிப்புள்ள பொருள்கள் அனைத்தையுமே ஈந்து விட்டான். அவன் மகளிர் அணிந்திருந்த மங்கலிய சூத்திரம் ஈய முடியாத தாகையால் ஈயவில்லை, என்ற கருத்து அப்பாட்டில் வலியுறுத் தப்படுகிறது.

ஈகையரிய இழையணி என்பதற்கு மங்கலிய சூத்திரம் எனப் புறநானூற்று உரைகாரரும் மற்றும் ஏனைத் தமிழ்ப் புலவர்களும் பொருள் காண்கின்றனர்.

இப்பாட்டில் வரும் 'ஈகையரிய இழை' என்ற சொல்லுக்கு 'மங்கலிய சூத்திரம்' எனப் பொருள் எழுதிய உரைகாரர் கரி காலன் மனைவியரைக் கூறிய 'மெல்லியல் மகளிரும் இழை களைந் தனரே' என்ற அடியில் வரும் இழைக்கு அருங்கல முதலவாகிய அணி எனப் பொருள் எழுதுகிறார். இவ்வுரையில் ஏதோ மயக்கம் இருப்பதாக டாக்டர். மா. இராசமாணிக்கனார் அவர்கள் கருதுகிறார்கள். அன்றியும் இவ்விழை அருங்கலம் எனப்பட்டது. இவ்வருங்கல முதலிய அணிகள் கணவன் இறந்த பின்னர் களையப்பட்டன. மற்றும் கண்ணகி தொடி களைந்துள்ளார். வெளிமான் மனைவியரும், கணவன் இறந்தபின் தொடி களைந் தனர். ஆகவே கணவன் இறந்த பின்னர்க் களையப்படும் அணி கலம் தொடியேயாகும். அத்தொடியே உரையாசிரியர் அருங் கலம் எனப் புறம் 224ஆம் பாட்டின் உரையில் கூறியது. ஈகை யரிய இழையணியாகக் குறிப்பிடப்படுவதும் தொடியாகவே இருக்கவேண்டும். தொடி என்பதே அருங்கலவணி. அவ்வருங்கல வணியே பல கலன்களை அணிந்த தலைவி ஒருத்திக்குக் கணவன்

திருமணக் காலத்தில் திருமணத்தின் அடையாளமாக வழங்கும் விலையுயர்ந்த நகை என்பதை வலியுறுத்துவதே அவர்கள் எண்ணம்.

அருங்கலம் என்ற சொல் பெறுதற்கரிய ஆபரணம் 'விலை மதிப்புள்ள ஆபரணம்' என்ற பொருள்களில் புறநானூற்றில் 146, 378, 398 முதலிய பாடல்களில் கையாளப்பட்டுள்ளது.

'இழை களைந்தனரே' என்ற தொடருக்குப் பொருள் பெறு தற்கரிய அணிகளை மட்டுமின்றி எல்லா அணிகளையுமே களைந் தனர் என்பதைக் கூறவே உரைகாரர் அருங்கல முதலவாகிய அணிகளை யொழித்தார், எனப் பொருள் எழுதினார். இழை என்றத் தனிச் சொல் புறநானூற்றில் 3, 11, 376, 378, 383 ஆய பாடல்களில் ஆபரணம் என்ற பொருளில் பயிலப்பட் டுள்ளது. இவண் பொதுவாக 'இழை களைந்தனரே' என்றதால் பொதுவான எல்லா அணிகளையும் உரைகாரர் கூறினார். ஆனால் தொடி களைந்ததாகவும் தொடி தகர்த்ததாகவும் புறநானூற்று, 238ஆம் பாடலிலும் சிலப்பதிகாரத்திலும் வருவது பொதுவாக வெறும் ஆபரணத்தைக் குறிக்காது சிறப்பான தொடி என்னும் ஒரே அணியைப் பற்றிக் கூறுகிறது. எனவே தொடியையும், இழையையும் இழைக்குப் பொருளான அருங்கலத்தையும் இணைத்துப் பொருத்திப் பார்த்தல் தக்கதன்று. இழை, அருங் கலம் என்பன நகைகட்குப் பொதுப் பெயர், தொடி என்பது சிறப்புப் பெயர்.

கரிகாலன் மனைவியர் சிறப்பணியைக் களைந்ததாகக் கூற வில்லை. பொதுவாக அணிகளனைத்தையும் களைந்துள்ளனர். இது தமிழ்ப் பெண்டிர் கைக்கொள்ளும் பழக்கமேயாகும். கணவன் மாண்ட பின்னர் அணிகளனைத்தையும் களைவது மரபு. அவ்வழக்குத்தான் அப்பாட்டில் கூறப்பட்டது. ஆவூர் மூலங் கிழார் பாடிய பாட்டில் வரும் 'கழிகல மகடூஉ' (புறம்: 261) என்பதும், நப்பசலையார் பாடிய பாட்டில் வரும் 'கழிகல மகளிர்' (புறம்: 280) என்பதும், விதவை மகளிர் அணிகலன்களை ஒழித்திருப்பதைக் காட்டுவன. "ஈகையரிய இழையணி" என்பதே பொதுவாக அணிகலன்களைக் கூறாது ஒரே அணியாக அமைவதாலும் பிறவற்றாலும் மாங்கல்ய மெனப் பொருள் கொள்ளத் தக்கதாகின்றது. அது தொடியன்று.

இதுவரை கரிகாலன் மனைவியர் களைந்த இழைகள் பொது வாக அணிகளைக் குறிப்பதேயன்றி தொடியையல்ல; ஆய்வேளின் மனைவியர் அணிந்திருந்ததும் தொடியன்று. அருங்கலம் என்பது பெறுதற்கரிய அல்லது விலை மதிப்புள்ள அணியைக் குறிப்பதே

யன்றித் தொடியைக் குறிப்பதன்று. புறநானூற்றுப் பழைய உரைகாரர் பொருளில் மயங்கிக் கூறுது தக்கவிடத்தே தக்க வாறே கூறியுள்ளார் என்பன விளக்கப்பட்டன.

'இறையனார் அகப் பொருள் உரை' என்பது சங்க காலத்து எழுந்தது எனப் பலர் கூறுகின்றனர். அவ்வுரையில் 'பாண்டிக் கோவை' என்ற நூலினின்று மேற்கோள்கள் காட்டப்பட்டுள்ளன. முதற் கோவையான திருக்கோவையாரே கி. பி. 9ஆம் நூற்றாண்டென்கையில் அதன்பின் எழுந்த பாண்டிக் கோவைப் பாடல்களை மேற்கோள்களாகக் கொண்ட அந்நூலையும் பிற்காலத்த தெனக் கொள்வதே சாலும். அவ்வுரையில் "தலை மகன் பார்ப்பார் சான்ருேர் முதலானவரை முன்னிட்டு அருங் கலங்களோடு வரைதற்குப் புகுவேன்" என்று குறிப்பிட்டுள்ளது. மேற்கோளாக வரும் பாண்டிக் கோவையில் 'அருங்கலம் அணிதல்' என்பதற்குப் பதிலாகப் பொன் அணிதல் என்பது ஆளப்பட்டுள்ளது. நம்பியகப் பொருளுக்கு இலக்கியமாக விளங்கும் தஞ்சை வாணன் கோவைச் செய்யுளில் 'பொன் புனைதல்' என்பது (செய்யுள் எண் 359) ஆளப்பட்டுள்ளது.

" தன்னூர் வரைதலும் தன்மனை வரைதலும்
என்னுமிவ் விரண்டொழித் தெவற்றினும் கிழவோன்
அந்தணர் சான்ருேர் முன்னிட் டருங்கலம்
தந்து வரைதல் தகுதி என்ப "

என நம்பியகச் செய்யுள் (198) பொருள் கூறுகிறது. இதனில் அருங்கலம் கொடுத்து மண முடித்தல் என்பது சூத்திர வாயிலாக வருதலானும் பிறவற்றிலும் அருங்கலம் என்பது வருதலானும் பிற்கால வழக்காய இதனைக் கொண்டு உரையாசிரியர் தொடி யென எழுதாது அருங்கல அணி முதலவாகிய அணிகளை ஒழித் தார் என எழுதினுர், என்னும் பொருள்பட அவர்கள் எழுதிச் செல்கிறுர்கள்.

ஆய்ந்து நோக்கும்போது அருங்கலம் என்ற சொல் புற நானூற்றில் மூன்றிடங்களிலும், சிலப்பதிகாரத்தில் நான்கிடங் களிலும், மற்றும் பிற இலக்கியங்களிலும், உரையாசிரியர் கண்ட பொருளில் பயன்படுத்தப்படுவதால் பிற்கால வழக்கை உட் கொண்டு புறநானூற்று உரையாசிரியர் மயங்கித் தவறுக உரை எழுதினுர் என்பது பொருந்தாக் கூற்றுகின்றது.

திருமணக் காலத்தில் தாலிக்கு இன்றைய மக்கள் தரும் சிறப்பைச் சங்ககால மக்கள் தொடிக்குத் தந்தார்கள் என்பதே அறிஞர் இராசமாணிக்கனுரின் கூற்று. தொடியே மணவணி என்றும், திருமணக் காலத்தில் மணமகனுல் மணமகளுக்கு

அளிக்கப்படுவதாகவும், உடலோடு கணவன் உள்ளவரை கிடந்து அவன் செத்த பிறகு கழற்றப்படுவதாகவும் அத்தொடி அமையும் என அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

கண்ணகி கணவனை இழந்தவுடன் தொடியை உடைத்தெறிந்தாள். வெளிமான் உரிமை மகளிர் வெளிமான் இறந்தவுடன் தொடியைக் கழற்றி விட்டனர். பொதுவாகத் தமிழ்ப் பெண்டிர் தலைவன் இறந்தவுடன் தொடியை மட்டுமின்றி எல்லா அணிகளையும் கழற்றி விடுவது மரபு. தொடியைக் கணவன் இறந்த பின்னர் களைந்தமைக்குச் சான்று கூறும் இலக்கியங்கள் மணக் காலத்தில் மணவணியாகத் தொடி அணியப்பட்டது என்பதற்கு எவ்விதச் சான்றையும் தரவில்லை. தொடி மணமகன் மணமகளுக்கு தருவதாகச் சான்று கிடைக்காமையோடு மட்டுமின்றித் தொடி என்பது மகளிர் திருமணமாகு முன்னும், திருமணம் ஆன பின்னும் காலவரையிறையன்றி அணியும் அணி என்பதற்குச் சான்றுகள் மிக உள. பரத்தையரும் தொடி அணிந்துள்ளார். சிறுமியரும் தொடி அணிந்துள்ளார். பொதுவாகக் கூறின் பெண்கள் அனைவருமே காலவரையறையின்றித் தொடி அணிந்துள்ளனர்.

ஒத்துப் பார்க்கையில் எவ்வகையிலும் தொடியை மணவணி எனக்கொள்ள இயலாது. ஆண்களும் தொடி அணிந்துள்ளனர். ஆண் குழந்தைகட்குத் தொடி அணிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான சான்றுகளைக் கொண்டிருக்கும் சங்க இலக்கியப் பாடல்களின் எண்ணை மட்டும் தருகிறேன்.

1. திருமணத்திற்கு முன் தொடி மகளிர் அணிந்திருந்தமை கலித்தொகை 90ஆம் பாடல்; நற்றிணை 23, 133; குறுந்தொகை 1, 7, 185, 233, 239, 356, 379; குறள் 1111, 1145;

2. திருமணத்திற்குப்பின் மகளிர் தொடியணிந்திருந்தமை கலித்தொகை 4, 90ஆம் பாடல்; மதுரைக் காஞ்சி வரிகள் 578, 9; நெடுநல்வாடை வரிகள் 141-2; குறள் 1244, 1245, 1246, 1248, 1272, 1285, 1289.

3. பரத்தையர் தொடி அணிந்திருந்தமை:—கலித்தொகை 71, 73, 74, 78, 82; குறுந்தொகை 364, 384;

4. விறலியர் தொடி அணிந்திருந்தமை:-கலித்தொகை 84, திருமுருகாற்றுப் படை வரிகள் 211, 112-14, சிறுபாணாற்றுப் படை வரிகள் 80, 81; குறுந்தொகைப் பாடல் 94, நற்றிணை 48;

இவையன்றித் தொடியைக் கழற்றும் பழக்கம் கணவனை இழந்த காலத்து மட்டுமின்றிக் கணவனைப் பிரிந்த காலத்தும்,

கணவனோடு ஊடிய காலத்தும் கூட நிகழ்ந்ததாக அறியக்கிடக்கின்றது. நெடுநல் வாடை தலைவி பாண்டியனைப் பிரிந்திருந்த காலத்தில், தொடியைக் களைந்திருந்தாள். பெருங்கதையில் வாசவதத்தை உதயணனோடு ஊடும்பொழுது தொடியினைக் கழற்றி எறிகிறாள்.

இதுவரை கண்டவற்றால் தொடி மணவணியன்று என்பதும் அது பொதுவாக மகளிரும் பலரும் அணிவது என்பதும் பெறப்படுகின்றது.

மறைமலையடிகள் நூல்நிலையம்

நான்காம் ஆண்டு நிறைவு

சென்னை, 105 லிங்கிச் செட்டித் தெருவிலுள்ள மறைமலையடிகள் நூல்நிலையம் தொடங்கி இத்திங்களோடு நான்காமாண்டு நிறைவுறுகின்றது. தமிழின் மறுமலர்ச்சிக்குக் காரணமாயிருந்த மறைத்திரு மறைமலையடிகள் தம் ஆராய்ச்சிக்கெனத் தொகுத்து வைத்திருந்த நூல்கள் அனைத்தும் இந் நூலகத்தில் உள்ளன. அவற்றுடன் புதிது புதிதாக வெளிவரும் நூல்களும் இந் நூலகத்தில் சேர்க்கப்பெறுகின்றன. தமிழ் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் ஏறத்தாழ பதினையாயிரம் நூல்கள் இந் நூலகத்தில் உள்ளன. ஆராய்ச்சியாளர்கட்கும், ஆசிரியர்கட்கும், மாணவர்கட்கும் பயன்படும் வகையில் நூல்கள் அமைந்துள்ளன. நான்காவது ஆண்டில் 20,678 பேர் இந்நூலகத்தைப் பயன்படுத்திய நூல்களின் எண்ணிக்கை தமிழ் 9224 ஆங்கிலம் 4539 மொத்தம் 13763. நூல்களல்லாது அரிய திங்கள், கிழமை இதழ்களும் ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் உள்ளன. இந்த ஆண்டில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலுமாக 2025 நூல்கள் புதிதாக நூலகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

நூற்களை வீட்டிற்கு எடுத்துச் சென்று படிப்பதற்காகத் தனியாக வழங்கும் பகுதியொன்றும் உள்ளது. தற்பொழுது இதில் 102 உறுப்பினர்கள் உள்ளனர். இலக்கியம், சமயம், கட்டுரை, நாவல், வரலாறு ஆகிய பல துறைகளிலுமாக 1500 நூல்கள் இவ் வழங்கும் பகுதியில் உள்ளன. இதில் உறுப்பினராவதற்கு ரூ. 10 முன்பணமும் ரூ. ஒன்று நுழைவுக் கட்டணமாகவும் செலுத்தவேண்டும். இந்நூலகத்தைச் சென்னையிலுள்ள மக்களனைவரும் நன்கு பயன்படுத்திப் பயன்பெறுதல் வேண்டும்.

தமிழன்னை திருவூசல்

(வித்வான். திரு. மா. கணபதி)

அறம்வாழ அருள்வாழ அன்பு வாழ
அருநெறிசொல் வள்ளுவனும் அண்ணல் வாழப்
புறவாழ்வும் அகவாழ்வும் பொருந்தி வாழப்
பொய்யுரையா மெய்ப்புலவர் புவியில் வாழ
மறந்திறம்பா மறவர்குடி மகிழ்ந்து வாழ
வளங்களெலாம் நிறைந்தினிது மாந்தர் வாழத்
திறஞ்சேர்ந்த கலைகளாறு பத்து நான்கும்
தெளிதமிழர்க் கொருதெய்வம் ஆடி ரூஞ்சல் ௧

உலகமெனும் பெருநிலமாம் பலகை மீது
உயர்பரத கண்டமென்னும் அமளி தன்னில்
இலகொளிசேர் வேங்கடமும் இணையி லாத
இருந்தவஞ்செய் குமரியுமோர் எல்லை யாக
நிலவிடுநற் றிரவிடமாம் துகில் விரித்தே
நீண்மதுரை மாநகராம் மலர்ப ரப்பி
குலசங்கப் பூம்பொகுட்டில் ஏறி யாங்கே
கோயில்கொளும் செந்தமிழே ஆடி ரூஞ்சல் ௨

நல்வயிரத் தூணிறுத்தி பவளம் நாட்டி
நன்னிறஞ்சேர் முத்தொளிரும் வடங்கள் பூட்டி
பல்விதமாம் மணிபதித்துப் பொன்னி னாலே
பண்ணியநற் பலகைதனில் அமர்ந்து நாளும்
மெல்லியலெங் குலந்தழைக்க வளருந் தெய்வம்
மேவியசீர்க் கலைமடந்தை இளைய நங்கை
சொல்வளஞ்சேர் மொழியரசி எங்கள் தெய்வம்
தொல்புகழார் செந்தமிழே ஆடி ரூஞ்சல், ௩

கண்ணுதலோன் நின்றொருபால் வடந்தொட் டாட்ட
கதிர்வடிவேல் முருகனுமோர் வடந்தொட் டாட்ட
ஒண்ணுதல்சேர் கலைமகளோர் வடந்தொட் டாட்ட
உமையவளும் திருமகளும் வடந்தொட் டாட்ட
எண்ணரிய முனிவரரும் வடந்தொட் டாட்ட
இன்புலவர் நின்றொருபால் வடந்தொட் டாட்ட
தண்ணருள்செய் துலகளிக்கும் எங்க ளன்னை
தமிழரசி மகிழ்ந்தினிது ஆடி ரூஞ்சல் ௪

திருவடியிற் கிண்கிணியும் சிலம்பு மாடத்
திகழிடையில் மேகலையும் துகிலு மாடக்
கருணைபொழி மார்பிலுறும் பெருமை யாலே
கவினுறுசிந் தாமணியும் கதிரு மாடப்
பெருகொளிசெய் குண்டலமும் செவியி லாடப்
பெய்தவளை யாபதியும் கையி லாட
மருவுபுகழ்க் குறள்மணிமா மகுடஞ் சூடி
மன்னியசீர்ச் செந்தமிழே ஆடி ரூஞ்சல் ௫

செய்திகளும் குறிப்புக்களும்

க. இந்தியாவின் பழங்குடிமக்கள் தமிழர்களே

"தென்னாட்டிலுள்ள தமிழ் மக்களுக்கும், பண்டைய எகிப்திய நாட்டுமக்களுக்கு மிடையே நெருங்கிய தொடர்பு இருந்து வந்திருக்கிறது. இதனை அண்மையில் எகிப்தில் நடைபெற்ற புதைபொருள் ஆராய்ச்சிகள் உறுதிப்படுத்தியுள்ளன......இந்தியாவின் பழங்குடி மக்கள் யார் என்பதைக் கூறுவது கடினமான காரியம். எனினும் கங்கைச்சமவெளி மனிதப்பூண்டு உருவாவதற்கு முன்னரே தட்சிணபீட பூமி மக்கள் பெரும் அளவில் வாழ்ந்து வந்தார்கள் என்பது உண்மை" என்று 13—9—62இல் ஐதராபாத் உஸ்மானியா பல்கலைக் கழகத்தில் மாநிலப் பாத்திரங்கள் பாதுகாப்புக் கட்டிடத்திற்கான அடித்தளக்கல் நாட்டிப் பேசிய இந்திய விஞ்ஞான ஆராய்ச்சி, பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உமாயூன் கபீர் கூறினார்.

குறிப்பு: தென்னிந்தியப் பழங்குடிகள் தமிழர்களே என்பதை இங்ஙனமே, வரலாற்று ஆசிரியர்கள் பலரும் பலகால் கூறியுள்ளனர். அமைச்சரவர்களின் உரை இதனை உறுதிசெய்வதாகும். இந்த உண்மையின் அடிப்படையிலேயே தமிழர் தம்முடைய மொழி, கலை, நாகரிகம் ஆகியவற்றைப் பாதுகாத்துத் தம்மை ஒரு தனி இனம் என்பதை உலகறியச் செய்ய விரும்புகின்றனர்.

உ. ஆங்கிலத்தின் இன்றியமையாமை பற்றி பண்டிதநேரு கருத்துரை

"ஆங்கிலம் ஒரு சிறந்த மொழி என்பதற்காகவும், வெளியுலகத்தோடு தொடர்பு கொள்ள அஃது இன்றியமையாதது என்பதற்காகவும் இந்தியாவில் ஆங்கிலம் தொடர்ந்து பயிலப்பட்டு வளர்ச்சியுறும் என்று நம்புகிறேன்" என்று அண்மையில் இலண்டனில் தாகூர் இந்திய நிலையத் துவக்க விழாவில் பேசியகாலை இந்திய முதலமைச்சர் பண்டித நேரு அறிவித்தார்.

குறிப்பு: ஆங்கிலத்தை அறவே விலக்கிவிட்டு அதற்குப் பதிலாக இந்தியை நிலைபெறச் செய்ய வேண்டும் என்று கூக்குரலிடும் சில இந்தி வெறியர்கட்கு பண்டித நேரு அவர்களின் கருத்துரை தக்கதோர் அறிவுரையாகும்.

௩. இந்தி வெறியர்கட்குப் பட்டம் தாணுப்பிள்ளை எச்சரிக்கை

"உடனடியாக இந்தியாவெங்கும் இந்தியை ஆட்சிமொழியாக்கி விட்டுத்தான் மறுவேலை பார்க்கவேண்டும் என்று வெறிக் கூச்சல் போடும் சிலர் வட இந்தியாவில் உள்ளனர். இத்தகைய வெறிக் கூச்சல்கள் தென்னிந்தியாவில் வெறுப்புணர்வு ஏற்படவே உதவி செய்வதாக இருக்கும்......கட்டாயம் எதுவுமின்றி தென்னிந்திய மக்கள் இந்தியைக் கற்றுக்கொள்வார்கள்" என்று முன்னாள் கேரள முதலமைச்சர் திரு. பட்டம்தாணுப் பிள்ளையவர்கள் 8—9—62 இல் தென்கேரள இந்திப் பிரசாரர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்த காலை கூறினார்.

குறிப்பு : திரு. பட்டம்தாணு அவர்களின் இந்த அறிவுரை வரவேற்கத் தக்கது. தென்னிந்தியாவில் வட இந்தியா மீது வெறுப் புணர்ச்சி ஏன் வளர்கிறது என்பதற்குரிய காரணத்தை அவர் தெளிவா கவும் துணிவாகவும் கூறியுள்ளார். கட்டாயமாக இந்தி திணிக்கப்பட் டால் அதன் விளைவு என்னாகும் என்பதற்கு விடையும் அவர் பேச்சில் தொக்கி நிற்கிறது. எனவே வடவர்கள் இனியாகிலும் திருந்துவார் களா என்பதைப் பொறுத்துப் பார்ப்போம்.

௪. இந்தியும், இந்திய ஒருமைப்பாடும்

அண்மையில் சென்னையில், சர். சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் தலைமையில் கூடிய இந்திய ஒருமைப் பாட்டுக் குழுவில் சான்று கூறிய பெருமக்கள் அனைவரும் பிரிவினைக் கோரிக்கைக்கு கட்டாய இந்தியே அடிப்படை காரணம் என்பதை வலியுறுத்திப் பேசினர்—செய்தி.

குறிப்பு : கட்டாய இந்தி மட்டுமன்று, ஆங்கிலத்தை அறவே நீக்கி விட்டு, அவ்விடத்தில் இந்தியின் தனியாட்சி நடத்த வேண்டும் என்னும் வடவர் சிலரின் எண்ணமும் பேச்சும் அதற்குக் காரணமாகும். இந்தி மொழி வெறியை அடிப்படையாக வைத்துத்தான் மற்ற அரசியல் துறைகளும் என்னவாகுமோ என்று தென்னாட்டவர் அஞ்சுகின்றனர். அச்சம் அகற்றப் பட்டாலன்றி ஒருமைப்பாடு என்பது வெறுமைப் பாடாகவே முடியும்.

௫. ஆங்கிலத்துக்கு பதில் இந்திதான் வருமாம் !

"ஆங்கிலத்துக்குப் பதிலாக இந்தியை மேற் கொள்வதே எங்கள் இறுதி நோக்கம்" என்று அலகாபாத் அஞ்சல் தலை சேகரிப்போர் கழகக் கூட்டத்தில் 15—9—62இல் பேசிய இந்திய உள்துறை அமைச் சர் திரு. லால்பகதூர் சாத்திரி கூறினார்.

குறிப்பு : இறுதி நோக்கம் இந்திதான் என்றால் மொழிப்பற்றும் இனப்பற்றும் மிக்குடைய தமிழக மக்களின் இறுதி நோக்கம் என்னா கும் என்பதையும் அமைச்சர் போன்றோர் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்.

௬. இந்தியை ஏற்க மறுப்பது அரசியலையே மறுப்பதாகுமாம் !

இந்தி மொழியை தேசீய மொழியாக ஏற்க மறுப்பது அரசியல் சட்டத்தை ஏற்க மறுப்பது போலாகும். இந்தி ஒரு மொழிப் பிரச்சினை யன்று. தேசிய பெருமையும் ஐக்கியத்தையும் நிலைநாட்ட இந்திமொழி தனக்குரிய இடத்தை அடையத்தான் வேண்டும்" என்று புது தில்லியில் இந்தி தின விழாவில் பேசியகாலை இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. வி. கே. கிருட்டிண மேனன் கூறியுள்ளார்.

குறிப்பு : சட்டத்துக்காக மக்களா? மக்களுக்காகச் சட்டமா என்பதை எண்ணிப் பார்த்திருந்தால் அமைச்சர் இப்படிப் பேசியிருக்க மாட்டார். இந்தியை ஏற்க மறுப்பது அரசியலையே ஏற்க மறுப்பதாகும் என்றால், மக்களின் உரிமை உணர்வை ஏற்க மறுப்பது எப்படி அரசியலாகும்.?

மதிப்புரை

"திருமுருகாற்றுப்படை"

(மூலமும் தெளிவுரையும்) இத் தெளிவுரையாசிரியர் திரு. **இராதா கிருட்டிணன்,** எம். ஏ. அவர்கள் இதன் விலை 50 காசுகள் கிடைக்குமிடம் திருக்குறள் தி. ரா. தருமராசன், எழுத்தர், தலைமை அஞ்சல் நிலையம் புதுக்கோட்டை. இவ்வெளியீடு "வள்ளலார் ஞானசபை" (புதுக்கோட்டை) யாரால் வெளியிடப் பெறுகிறது.

இந்நூல் சிறந்த பழந்தமிழர்தங் குறிக்கோளாகிய தமிழ்ச் சமய நூலாகும். மேலும் இது தமிழ் மந்திர நூலாகும் இதனை அனைவர்களும் ஓதிப்பயன் பெற்றுவருகின்றூர்கள். தெளிவுரையாசிரியர் சொற்பொருள் விளக்கங்கள் நன்ருக யாத்துள்ளனர். நடை ஆற்றொழுக்கு. எளிமையும் இனிமையும் வாய்ந்தது. படைவீட்டு விளக்கங்கள் நன்கு தரப்பட்டுள்ளன. செந்தமிழன்பர்களும் செந்நெறிச் செல்வர்களும் வாங்கி ஓதிப்பயன் பெறுவார்களாக.

'பேசும் ஓவியங்கள்'

ஆசிரியர் திரு. த. **கோவேந்தன்** அவர்கள், வானம்பாடி வெளியீடு இஃதோர் இனிய செய்யுள் நூல். வடிவில் சிறியதாயினும் கருத்தில் பெரியதாகும். இயற்கையில் ஒவ்வொருவர்க்கும் நிகழக்கூடிய இன்ப உள்ள நிகழ்ச்சிகளைப் படம்பிடித்துக் காட்டுவது போல் அமைந்துள்ளது. அனைவரும் புரிந்து கொள்ளக் கூடிய அழகிய எளிய நடை. பல தலைப்புக்களுள்ளன. மாணவர்கள் விரும்பிப் படித்தற்கும், பாடப் பயில்தற்கும் இந்நூல் பெருந்துணையாகும். கற்றுப் பயன்பெறுவார்களாக.

திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி

இக்கல்லூரி சென்னை நக்கீரர் கழகத்தின் சார்பில், 44, பவழக்காரத் தெருவிலுள்ள ஏ. ஆர். சி. பெண்கள் உயர்நிலைப் பள்ளியில், சனி, ஞாயிறு நீங்கலாக ஒவ்வொரு நாளும் மாலை 6-15 மணி முதல் 7-45 மணி வரை நடைபெற்று வருகிறது. சிறந்த தமிழாசிரியர்களைக் கொண்டு வித்துவான் புகுநிலை, (Entrance) முதல்நிலை (Preliminary), இறுதிநிலை, வகுப்புகட் குரிய பாடங்கள் பயிற்று விக்கப்படும்.

கழகச் சார்பில் 19-8-62 முதல் ஒவ்வொரு ஞாயிறு காலை 10 மணி முதல் 11 மணி வரை 27, கொண்டலையர் தெரு பெத்துநாயகன் பேட்டை 'தமிழக'த்தில் புலவர், கா. சி. தனக்கோடி அவர்களால் **'பத்துப்பாட்டு'** வகுப்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தமிழன்பர்கள் இவ் வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்வார்களாக.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.